www.tamilarangam.net

அன்பளிப்பு ரூபா 10.00

தமிழீழ மக்கள் கட்சியின் அரசியல் ஏடு

தமிழீழம்

மக்களுக்கே அனைத்து அதிகாரங்களும்

பங்குனி 2000

இதழ் -12

தமிழீழ மக்கள் கட்சி — சுதந்திரம் — சமத்துவம் — தமிழீழம்

பிள்ள, இஞ்சபார் என்ர
கைய. காய்ச்சிப் போச்சி.
தனிப்பொம்பிளயா
மண்ணச்சாரி பாத்திகட்டி
தண்ணி இறைச்சன். இப்ப
எங்கட பொம்பிளைகள் தான்
இந்த வேலையெல்லாஞ்
செய்யுதுகள்.

— தமிழீழப் பெண் —

# தென்தமிழீழத்தில் தொடரும் போராட்டங்கள்...

சாம்பல்தீவு சல்லி கிராமத்தில் ஒரே நாளில் அரை கோடி ரூபா பெறுமதியான நம்மக்களின் சொத்துக்களை சிங்கள கடற்படையினர் தீயிட்டு சாம்பராக்கியுள்ளனர். ஏற்கனவே ஆழ்கடல் மீன்பிடிக்கு கடுமையான தடைவிதித்திருக்கும் கடற்படையினர், மக்களிடம் எஞ்சியிருக்கும் சொத்துக்களையும் இவ்வாறு அழித்துள்ளர். இக்கொடுமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் நஷ்டஈடு கோரியும் மாணவர்கள் உட்பட மக்கள் கடுமையான எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். போக்குவரத்தை ஸ்தம்பிக்கச் செய்துள்ளனர். கடற்படையை அகற்றி பொலீஸ் அல்லது இராணுவபாதுகாப்பை உறுதிப்படுத்தும்படி கோரியுள்ளனர். கடற்படையிரின் இக் கொடுரத்திற்கும் அதனை மக்கள் குறிப்பாக எதிர்ப்பதற்கும் ஒரு பின்னணி உள்ளது.

83 இனஅழிப்பு எங்கும் கட்டவிழ்த்துவிட்டதை நினைவு கூர்ந்தால், இக் கடற்படையினர் கடற்கரை தமிழ் கிராமங்களையும் அவர்களின் சொத்துக்கள் மற்றும் மீன்பிடி உபகரணங்களையும் திட்டமிட்டு அழித்ததையும், 200 மேற்பட்ட கடற்படையினர் நேரடியாக இதில் சம்பந்தப்பட்டதையும் தற்போதைய நிலையுடன் நாம் ஒப்பிடமுடியும். திருமலையை ஆக்கிரமித்து நமது தேசத்தின் கடல்வளங்களை தொடர்ச்சியாக கொள்ளையிட்டு வரும் சிங்கள முதலாளிகளுக்கும் சிங்கள கடற்படையினருக்கும் இடையே மிகவும் நெருக்கமான தொடர்பு உள்ளதை புரிந்துகொள்ள முடியும். இந்த முதலாளிகளின் நீட்டப்பட்ட கரங்களாக கடற்படையினர் செயற்பட்டு, நமதுமக்களின் மீன்பிடித்தொழிலையும் இருப்பையும் திட்டமிட்டு அழித்து வருகின்றனர். அதன் தொடர்ச்சிதான் சல்லி நிகழ்வு.

மட்டக்களப்பு பல்கலைக்கழக மாணவர்கள் அரசின் பாஸ் முறையை எதிர்த்து ஒரு நாள் ஆர்ப்பாட்டத்தை வெற்றிகரமாக செய்துள்ளனர். கொழும்பு வரும் மட்டக்களப்பு பட்டிப்பளை மக்களை தடுக்கும் செயலாக இந்த பாஸ் முறைபற்றி பொதுவில் கதைக்கப்பட்டாலும், இது வடதமிழீழத்தையும் தென்தமிழீழத்தையும் சேர்ந்த நமது மக்கள் பரஸ்பரம் தொடர்புகொள்ளாது தடுக்கும் ஒரு இரகசிய முயற்சி எனவும் எனவே இதனை அனைத்து மக்களும் இணைந்து எதிர்க்க வேண்டும் என சரியாகவே மாணவர்கள் எச்சரித்துள்ளனர். எனவே தமிழீழத்தின் அனைத்து மாணவர்களும் நாமும் இணைந்து இந்த பாஸ்முறைக்கு எதிராக தொடர்ச்சியாக செயற்பட வேண்டும்.

அரசியல் தீர்வு முயற்சிகளை எதிர்க்கும் சிங்கள இனவெறியர்களின் முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைக்குமாறு கோரி மட்டக் களப்பில் பேரணி நடந்துள்ளதும் ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும். இனஅடக்குமுறைக்கும், இனவெறிக்கும் முன்னால், நமது மக்களின்

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

## நம்தேசவளங்களை அழித்து...

தென்தமிழீழம் பட்டிப்பளையில் (அம்பாறையில்) 15000 இற்கும் மேற்பட்ட கால்நடைக்கூட்டத்தை அவை தமிழருக்கு சொந்தம் என்பதனால், அவை தமிழருக்கு உணவூட்டுகின்றன என்பதனால், பட்டிணி போட்டு அழித்தொழிக்க சிங்கள படைகள் காரியமாற்றுகின்றன. மேய்ச்சல்நிலங்களை தடைசெய்து கால்நடைகளை கொன்றொழிக்கும் இத்திட்டம் தமிழ் மக்களை கூட்டாக தண்டித்து அழித்தொழிக்கும் மற்றுமொரு புதிய வடிவமாகும்.

15 வருடங்களாக தொடர்ச்சியாக நமது கடல்வளத்தை சிதைத்தார்கள், கடல்தொழில்களை முடக்கினார்கள், காடுகளை வெட்டிச்சரித்தார்கள், எரித்தார்கள், எமது உற்பத்தி பொருட்கள் வெளியே சென்று வருமானம் ஈட்டுவதை தடுத்து நிறுத்தினார்கள், அத்தியாவசிய பொருட்களும் மருந்துகளும் உள்ளே வருவதையும் நிறுத்தினர்கள், கடைசியாக மனித நகர்வுகளை தடைசெய்தார்கள், இன்று மாட்டு மந்தைகளை பட்டினியால் வதைத்து நம் தேசத்தையும் அதன் விடுதலைப்போராட்டத்தையும் நிர்மூலம் செய்து விடலாம் என முனைகின்றார்கள். ஆனாலும் நமது போராட்டம் அதன் இலக்கு தவறாது பல்வேறு தடைகளையும் தாண்டி முன்னேறிக்கொண்டே இருக்கின்றது.

ஒரு பசுவை உணவிற்கான கொல்வதையே பாவமாக்கி, மனதைக்கசக்கும் விதத்தில் ஒவியங்களாக்கி, மின் விளக்குகளால் சோடனை செய்து, இரவு பகலாக வாரக்கணக்கில் வெசாக் கொண்டாட்டம் நடாத்தும் இவர்கள், தமிழ் கால்நடைக்கூட்டங்கள் என்பதால் பல பத்தாயிரக்கணக்கில் பட்டிணியால் வதக்கி கொன்றொழிப்பது பாவமில்லை என்று கருதுகின்றார்களா? மனிதக்கொலை பாவம் என மந்திரம் சொல்லும் இவர்கள் தமிழ் மனிதர்களை மட்டுமல்ல, தம்மவர்களையே ஆயிரக்கணக்கில் கொன்று குவிக்கவில்லையா? ஆளும் கும்பல் ஆளும் கும்பல்தான். அவர்களுக்கு மனிதர்கள் என்ன மற்ற உயிரிகள் என்ன?

நடைபெறுவது எதுவும் தற்செயல் நிகழ்வுகள் அல்ல என்பது மட்டும் உண்மை. தமிழ் தேசத்ததின் வளங்கள் அனைத்தையும் படிப்படியாக நிர்மூலம் செய்து அதன் சுயமான இருப்பையும் எதிர்காலத்தையும், அதன் விரைந்த முன்னேற்றத்தையும், அது கொண்டுள்ள அளப்பரிய உள்ளாற்றலையும் இல்லாதொழித்து வரும் எதிரிகளின் திட்டங்களின் பகுதிகள் இவை. ஆக்கிரமிப்பாளர்களாகிய அவர்கள் வெகுவிரைவில் விரட்டியடிக்கப்படுவர் என்பது அவர்களுக்கே நன்கு தெரியும். அதற்கு முன் அனைத்தையும் அழித்துவிடலாம் என மும்முரமாக இருக்கின்றனர். மற்றவர்களின் அழிவில் தமது இருப்பை தக்க வைத்துவரும் எதிரிகளுக்கு மக்களின் அடிப்படை வாழ்வுத்தேவைகள் பற்றியும், மக்களுக்கும் இயற்கை வாழ்வுமுறைக்கும் உழைப்பு முறைக்கும் உயிரினங்களுக்கும்

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

## புறக்கோட்டையில் மீண்டும் 83?

புறக்கோட்டையில் கடையடைப்பு. அரசியல்வாதிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பாதாளஉலக பயங்கரவாதிகளால் தமிழ், முஸ்லீம் வர்த்தகர்கள் மீது பயமுறுத்தல்களும் மற்றும் தாக்குதல்களும். வர்த்தகபொருட்கள் மீது கறுப்பு வர்த்தகர்களின் சட்டவிரோத கோட்டா முறையை மீறியதால் கடை உடைப்பு. இந்த அச்சுறுத்தல்கள் இறுதியாக இந்திய பாகிஸ்தான் பொருட்களை விற்பனை செய்யக்கூடாது என்று நிர்ப்பந்திக்கும் நிலைக்கு சென்றுள்ளது.

தமிழர்களினதும் முஸ்லீம்களதும் வர்த்தக முயற்சிக்கு முன்னால் நின்றுபிடிக்க முடியாத சிங்கள இனவாதிகளுக்கு புறக்கோட்டை வர்த்தகத்தின் மீது எப்போதும் ஒரு குறி உண்டு. இந்த செல்வாக்கை உடைப்பதற்காக இவர்கள் பலதசாப்தங்களாக அரச அதிகாரங்களை கொண்டும் அரச பயங்கரவாதத்தை கொண்டும் முயற்சித்து வருகின்றனர். இதன் ஒரு உச்சவடிவத்தினையே 1983 ஆடியில் அனுபவித்தோம்.

இப்போதல்ல ஒரு நூறு வருடங்களுக்கு முன்பிருந்தே, புறக்கோட்டை சிங்கள வர்த்தகர் புதல்வன் அநாகாரிக தர்மபால, சிங்கள இனவாதத்தின் சித்தாந்தி, காலம் தொடக்கமே இந்த அச்சுறுத்தல் இருந்து வருகின்றது. அவர்களின் வாரிசுகள் அச்சாக இப்போதும் அப்படியே உள்ளனர் என்பது தொடர்ந்தும் நிருபிக்கப்பட்டு வருகின்றது. புறக்கோட்டையை இனச்சுத்திகரிப்பு செய்வதென்பது இனவெறியர்களின் நீண்ட கால நிகழ்ச்சி நிரலாகும். இந்த வாரிசுகள் ஆளுங்குழுமத்தின் பல்வேறு கூறுகளினுள்ளும் விரவிக்கிடக்கின்றனர். சுமார் நூறு வருடங்களுக்கு முன்பே ஆரிய தூய்மைவாதம் பரப்பி தமிழ், முஸ்லீம் வெறுப்பை சிங்கள மக்கள் மத்தியில் வளர்த்து விட்டவர்களின் வாரிசுகள் இவர்கள். இவர்களின் கைளில்தான் இன்றைய அரசியல்யாப்பும் அதனை காக்க சிங்கள இராணுவ, பொலிசுப்படைகளும் சட்டமியற்றும் மன்றங்களும் உள்ளன.

83 ஆனியில் புறக்கோட்டைப்பகுதியில் தமிழர்களை கொலை செய்தும், தமிழ் முஸ்லீம்களதும் வர்த்த நிலையங்களுக்கு ஆயுதப்படைகளின் ஒத்துழைப்புடன் தீ வைத்து சூறையாடலும் செய்தனர். அழித்தொழிப்பு நடந்து முடிந்து ஒரு வாரத்திற்குள் அரசு இந்த கொள்ளைக்காரர்களுக்கு ஆதரவாக ஒரு "அற்புதமான" சட்டமியற்றியது. அந்த அற்புதத்தை இன்று பலரும் மறந்திருப்பர். ஒரு மாதத்திற்குள் உரிமையாளர்கள் திரும்ப வந்து நிலையங்களை புனரமைத்து தொழில் நடாத்த வேண்டும். தவறினால் பறிமுதல் செய்யப்படும் என்றது சட்டம். இரத்தக்கறைகள் காய முன், தீச்சுவாலைகள் அணைய முன் இந்த சட்டம் பிறப்பிக்கப்பட்டது. எங்கெங்கோ அகதிகள் முகாம்களில் முடங்கியிருந்த புறக்கோட்டை தமிழரின் உடமைகளை

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

**எமது இலட்சியம் சுதந்திர தமிழீழம்**

# அரசியல்தீர்வின் பின்னே அழித்தொழிப்பு உபாயமா ?

போர்முனையில் படுதோல்விகள். கடுமையான பொருளாதார நெருக்கடிகள், வெளிப்படையான சர்வதேசஅழுத்தங்கள். தேசியவிடுதலை நோக்கிய நமது மக்களின் ஆர்வமும் பல்வேறு வெகுசன போராட்டங்களின் அதிகரிப்பும். நமது மக்கள் சிறிலங்கா அரசு மீது வெளிப்படுத்திய வெளிப்படையான வெறுப்பு. அனைத்தையும் கணிப்பீடு செய்த சிங்கள அரசு ஒரு புதிய எத்தனிப்பை தொடக்கியுள்ளது.


சமாதான வழியில் தமிழ் தேசிய பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண வேண்டும்என்ற விடயத்தை தற்போது சற்று வித்தியாசமான முறையில் அரசியல் அரங்கிற்கு கொண்டு வந்துள்ளது. இது நமது தேசத்திற்குள்ளும் வெளியிலும் பரபரப்பான விடயமாக உள்ளது. ஒவ்வொரு தரப்பும் தத்தமது நலன் சார்ந்த கோரிக்கைகளை முன்வைக்கத் தொடங்கியுள்ளதையும் காணமுடிகின்றது. சிறிலங்கா தேசமும் அதன் பல்வேறு பிரிவினரும் அரசியல் தீர்வுமுயற்சிக்கு ஒருமித்த கருத்துடன் உள்ளதாக – உண்மையில் அவ்வாறு இல்லாத போதும்- விளம்பரப்படுத்தப்படுகின்றது.

உண்மையான அரசியல் தீர்வினை, எமது மக்களின் விடுதலைக்காக போராடுபவர்களும், அடக்கப்படும் நம் மக்களை நேசிப்பவர்களும் என்றுமே விரும்புகின்றனர். தம்மீது திணிக்கப்பட்ட அடக்குமுறையை தகர்த்தெறிந்து சுதந்திர காற்றை சுவாசிக்கவும் அமைதியாக வாழவும் விரும்பும் எமது மக்கள் தமக்கு தெரிந்த அனைத்து வழிமுறைகளிலும் சமாதானத்திற்காவும் அரசியல் தீர்விற்காகவும் கடுமையாக உழைக்கின்றனர். மீண்டும் மீண்டும் அரசியல் தீரவு கோரி நமது தேசம் களைத்துக் கைவிட்ட தருணத்தில் அரசியல் தீர்வுக்கு ஒரு முயற்சி மேற்கொள்ளப்படுவதாக தெரிகின்றது.

அரசியல் ரீதியாக பிரச்சனையை தீர்க்குமாறு, எமது கோரிக்கைகள் வந்த போதெல்லாம் இந்த அடக்குமுறையாளர்கள் எமக்கு கொடுரமான யுத்தத்தை பதிலாக தந்துள்ளனர். இருந்தும் தமக்கேயுரிய கபடத்தனத்துடன், அவர்களும் எம்மை விட பலமாக, தாமே முதன் முதலில் சமாதானம் பற்றியும் தீர்வு பற்றியும் பேசுபவர்களாக காட்டிக்கொள்ளும் சந்தர்ப்பங்கள் அடிக்கடி நிகழ்கின்றன. இதுவெல்லாம், எப்போதென்றால்?...அவர்கள் பலவீனமாகும்போது, அடிவாங்கி குப்புற விழும்போது, சர்வதேச அழுத்தம் கடுமையாகி நிதி கடன் உதவிகள் மற்றும் யுத்த தளவாடங்கள் தங்குதடையின்றி வருவது மட்டுப்படுத்தும்போது, அல்லது அடுத்த புதிய தளத்தில் யுத்தத்திற்கு தயாராவதற்கு அவகாசம் தேவைப்படும்போது....

இப்படியான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எதிரிகள் அரசியல் தீர்வு பற்றி கதையளப்பர். இந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர்களின் இரட்டை அணுகுமுறையினை வரலாற்றில் பலதடவை அனுபவித்துள்ளோம். பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம், சிறிமா-செல்வா உடன்பாடு, இந்திய-இலங்கை ஒப்பந்தம், பிரேமதாச வின் முயற்சிகள், தற்போதைய சந்திரிகா அரசு வரை இந்த வகை கபடத்தனத்தையும் ஏமாற்றுதல்களையும் கண்டுள்ளோம். தற்போதைய புதிய முயற்சியிலும் கூட இதயசுத்தியற்ற கபட அறிகுறைகள் தென்படவே செய்கின்றன.

ஜேஆர் தலைமையில், பிரேமதாச தலைமையில், சந்திரிகா தலைமையில் அரசியல் தீர்வுகுறித்து பலதடவை பேசப்பட்டுள்ளது. அடக்கப்படும் கொடுமைப்படுத்தப்படும் மக்களின் நலன்களின்பாட்டு அல்லாமல், அடக்குமுறையாளர்களின் நிகழ்ச்சிநிரலின் பாட்பட்டு இது ஒப்புவிக்கப்பட்டுள்ளது. இறுதியில் அவர்களின் சமாதான முயற்சிகளுக்கு தடையானவர்கள் நாம்என எம்மீது முத்திரை குத்தி, மறுபடியும் மறுபடியும் யுத்தத்தை விரிவுபடுத்துவார்கள்.



இதுவரை எம்மீதான அடக்குமுறைக்கும் ஆக்கிமிப்பிற்கும் எதிராகவே நாம் போராடி வந்துள்ளோம். இதற்காக நாம் நிறைய விலைகள் கொடுத்துள்ளோம். எமது வளங்கள் அனைத்தையும் திரட்டி எமது அடிப்படை உரிமைகளுக்காகவும், பாதுகாப்பிற்காகவும் போராடும் எமக்கு, தொடர்ந்தும் இந்த வழிமுறையை பின்பற்ற இறைமை உள்ளது. எவருக்கும் காரணம் கூற வேண்டிய அவசியம் இல்லை.

தற்போதும் சந்திரிகா அரசு தீர்வு முயற்சியை முன்வைத்துள்ளது. தன்மீதான தாக்குதல் முயற்சிக்கு பின்னரும், இந்த திசையில்தான் சளைக்காது ஈடுபடுவதாக ஒரு பிம்பத்தை சந்திரிகா ஏற்படுத்துகின்றார். எதிர் கட்சிக்கு பௌவியமான அழைப்புகள் விடுக்கப்பட்டுள்ளது. மூன்றாம் தரப்பு தலையீடா வேண்டவே வேண்டாம், யூஎன்ஓவும் மற்றய சர்வதேச அமைப்புகளும் இங்கு சூழலியல், மற்றும் கழிவுக்கால்வாய் பிரச்சனைகளை மட்டும் பார்த்துக் கொண்டால் போதும் என வீரவசனம் பேசிய தமிழ் பேசும் சிங்கள சோவினிஸ்ட் கதிர்காமர் தற்போது தலைகீழாக நிற்கின்றார். மூன்றாம் தரப்புடன் கைகுலுக்கி விடுதலைப்புலிகளுக்கு இரகசியமாக அழைப்பு விடுத்துள்ளார். இவர்களின் விளக்கங்கள் வியாக்கியானங்கள் ஒருபுறமிருக்கட்டும், எதிரிகள் எதிரிகள்தான் எனவே நமது தரப்பில் முதலில் எச்சரிக்கையடைவோம்.

எதிரி சமாதானமெனும் போதும் அரசியல்தீர்வு எனும்போதும், விழிப்பாக இரு என இந்த வரலாற்று அனுபவங்கள் எம்மை எச்சரிக்கின்றன. தாம் பின்னுகின்ற சதி வலைக்குள் எமது போராட்டத்தையும் போராட்டப்பிரிவினரையும் மக்களையும் சிக்கவைக்கவும் பிளவுபடுத்தவும் பல முறை இந்த எதிரிகள் முயன்று இதில் குறைந்தளவாயினும் வெற்றிகளை பெற்றுள்ளனர். எதிரியின் பலத்தை விட எம்மிடம் நிலவிய பலவீனமே எதிரிகளின் இந்த குறுகிய, அற்ப வெற்றிகளுக்கு காரணம் என்பதையும் நாம் குறித்துக்கொள்வோம்.

எவ்வாறாயினும் அப்பொதெல்லாம் தேசியத்தில் உறுதியாக நின்று விட்டுக் கொடாது போராடிய, விடுதலைப்புலிகள், போராட்டத்தையும் அதன் தவிர்க்க முடியா அவசியத்தையும் தக்க வைத்துள்ளனர். தற்போது தேசவிடுதலை விரும்பும் அனைத்து மக்களையும் ஒரணியாக்கி, தேசிய எழுச்சியை பேரலையாக்கி விடுதலை நோக்கி திடமாகவும், உணர்வுபூர்வமாகவும் நடைபோட தேசபக்த சக்திகள் அனைத்தும் மக்களுடன் இணைந்து விடாப்பிடியாக காரியமாற்ற வேண்டும்.

எதிரிகள் தொடர்ச்சியாக அடைந்து வரும் இராணுவ மற்றும் இராஜ தந்திர தோல்விகளும் தமிழ் மக்கள் படிப்படியாக தமது சொந்த வழிமுறைகளில் தனியரசு நோக்கி நகர்வதும், அடக்குமுறைக்கு எதிராக கிளர்வதும் சில சர்வதேச அழுத்தங்களும், எதிரிகளை திகிலடையச் செய்துள்ளது. எனவே எதிரிகளுக்கு இப்போது "அரசியல் தீர்வொன்று" தேவைப்படுகின்றது. இதனால் அவர்கள் இரகசிய சமிக்ஞை தந்து நோர்வேயை அழைத்து மீண்டும் புதிய வழிமுறையில் சதி வலை பின்னுகின்றனர். நேற்றுவரையும் இந்த வினாடியிலும் போர்முனையை வலுப்படுத்திவருபவர்களுக்கு, தீர்வு முயற்சிகளுக்காக சிங்கள மக்கள் மத்தியில் எந்தவொரு சிறு எத்தனிப்பையும் செய்யாத இவர்கள் எப்படி சமாதானத்தை கொண்டு வரப்போகின்றார்கள்? எமது தேசத்திற்கும், சிங்கள தேசத்தவருக்கும் தெரியாமல், இரகசியமாக சிறிலங்கா அரசு, தாம் நினைக்கும், வடிவமைக்கும் தீர்வுத்திட்டத்தைக் கொண்டு வரப்போகின்றார்கள் என நாம் நம்ப வேண்டுமா?

இதுவரை தமக்கு விருப்புடையதாக இருந்த சிறிலங்கா அரசானது, மிகவும் மோசமாக பலவீனமடைவதை ஏகாதிபத்தியங்களும் அதன் சகாக்களும் விரும்புவதில்லை. எனவே அவர்களும் விழிப்படைந்து முன்வந்து விட்டார்கள். இதுவரைக்கும் பெருகிய இரத்த ஆற்றையும் அதிலிருந்து பற்றியெழுந்த தீரமிக்க போராட்டத்தின் நியாயமும் இந்த மூன்றாம் தரப்பினருக்கு இதுவரை தெரியாது போய் விட்டதா? எனவேதான் தற்போது நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஆயினும் இன்றைய சர்வதேச சூழலில் இப்படியான சந்தர்ப்பங்கள் நம்மை நெருங்கும் போது, அது குறித்து நாம் அக்கறையற்றவர்களாக இருந்துவிடவும் முடியாது.

எமது தேசிய கோரிக்கைகளையும் நிபந்தனைகளையும் தெள்ளத்தெளிவாகவும் மக்கள் நலனில் இருந்தும் நாம் முன்வைக்க வேண்டும். அவை மக்களின் உணர்வுகளுடனும் குரல்களுடனும் இணைக்கப்பட வேண்டும். மக்களின் எதிர்பார்ப்புகளாக அவை வெளிப்படுத்தப்பட வேண்டும். படைகளை விலக்குவதோ, பொருளாதாரத்தடை நீக்கமோ, சுதந்திரமான போக்குவரத்து என்பதோ தேசத்தின் பிரச்சனையாகும். மறுபடியும் எதிரிகள் நமது தேசத்தை ஏய்க்க நினைத்தால், அதற்கான அறிகுறிகளை கண்டால், எதிரிகள் மீண்டும் நம்மீது போரை உக்கிரப்படுத்தப்போகின்றனர் என்பதுதான் பொருள். எனவே அப்படியான சூழலில் தமது தற்காப்பு தாக்குதலை அடக்கப்படும் தேசம் என்ற வகையில், முதலில் நடாத்தினாலும் அது முற்றிலும் நியாயமானதே. மீண்டும் ஒரு மயக்கம் இந்த விடயத்தில் வேண்டவே வேண்டாம்.

விடுதலைப்புலிகளும் மக்களின் தேசிய நலன்களில் உறுதியாக நிற்பதுடன், நடைபெறும் அரசியல் பேச்சுக்கள் தொடர்பான முன்னேற்றங்களோ பின்னடைவுகளோ வெளிப்படையாகவும் சொந்த மக்களுக்கும் நம்மீது கரிசனை கொண்ட சர்வதேச சமூகத்திற்கு பதில் சொல்லும் கடப்பாட்டையும் கொண்டிருக்க வேண்டும். ஒரு கட்டத்தில் எதிரிகள் எம்மை ஏய்க்க முனைந்தால், அதனை அனைவருக்கும் அம்பலமாக்கும் வழிவகைகளை நாம் கொண்டிருக்க வேண்டும்.

நமது தேசம் நீண்ட நெடும் விடுதலைப் போராட்டத்தின் இறுதிக்கட்டத்தில் நின்று கொண்டிருக்கின்றது. ஒரு போதும் நாம் பின்னோக்கி சென்றுவிடக்கூடாது. இந்த அரசியல் தீர்வு வெற்றி பெற்றாலும் நமது தேசிய இறைமையும் நீண்ட கால அபிலாசைகளும் பூர்த்தியடைய வேண்டும். எதிரியின் கபடத்தால், தோல்வியடைந்தாலும், மிகவும் குறுகிய காலத்தில் நாம் தனியரசை சொந்தமாக அமைத்துக்கொள்ள வேண்டும். இதில் எந்த மயக்கமும் இருக்க கூடாது. அனைவரும் இதற்காக ஒன்றாக இணைந்து செயற்பட வேண்டிய தருணம் இது.

ஒரு சில இலக்குகள் சாதகமாக அமைந்துவிட்டன என்பதற்காக தம்மீது சுமத்தப்பட்டுள்ள ஒட்டுமொத்த தேசிய கடமைகளை விடுதலைபுலிகள் துச்சமாக கருதிவிடக்கூடாது. அநாவசிய விலைகளை கொடுக்கும் நிலையில் நமது தேசம் அப்படியொன்றும் வற்றாத வளங்கள் கொண்டதல்ல. மீண்டும் அப்படியான ஒரு சூழலை, அதாவது 94 சூழலை, எமது போராட்டத்தை சர்வதேச அளவில் தனிமைப்படுத்தும் சூழலை, ஏற்படுத்திப்பார்க்கலாம் என எதிரிகள் முயலக்கூடும். அச்சூழலுக்குள் சிக்கிக்கொள்ளாது தேசிய நலனில் இருந்து செயற்பட தீர்க்கதரிசனமான முன்னெடுப்புகளை தலைமைகள் கொண்டிருக்க வேண்டும். எந்தவித உணர்ச்சிவசப்படலுக்கும் இது தருணமல்ல. நமது கட்சி மீளவும் அழுத்த விரும்புவது அதனையே.

www.tamilarangam.net


# வரலாற்று முன்னுதாரணமாய் நமது பெண்கள்

இன்று பெண்கள் பிரச்சினை என்பது, சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாச்சார தளங்களில் தவிர்க்க முடியாது அக்கறை கொள்ள வேண்டிய விடயமாகி விட்டது. நவீன அரசியல் வாழ்வுக்குள் நுழைந்து விட்ட அனைத்து சமூகங்களிலும் பெண்கள் தொடர்பான விடயங்கள் பேசுபொருளாகி விட்டன, விவாதப் புள்ளிகளாகியுள்ளன. லெஸ்பியன் உறவை சட்டபூர்வமாக்குவது முதல், அரசியல் சபைகளில் பெண்களுக்கு பாதி இடங்கள் ஒதுக்குவது வரை ஒரு மிகப் பரந்த எல்லையில் பெண்களின் பிரச்சினை முக்கியத்துவம் பெற்றுள்ளது.

இவை அனைத்தும் பெண்களினாலேயே சாத்தியமாக்கப்பட்டுள்ளன. உலகின் பலவேறு சமூகங்களிலும் பெண்களினால் முன்னெடுக்கப்பட்டு வந்திருக்கின்ற உறுதியான போராட்டங்களின் விளைவுகளாக இந்நிலைமைகள் உருவாகியுள்ளன. சமூகரீதியல் அடக்கப்பட்டவர்களாக, அரசியல்ரீதியில் முக்கியத்துவமற்றவர்களாக, பொருளாதார ரீதியில் தங்கியிருப்பவர்களாக, ஒரு சமூகத்தின் கலாச்சார சுமைகளை சுமப்பவர்களாக மாற்றப்பட்டிருந்த நிலையிலிருந்து, தீரா விடுதலை வேட்கையுடன் பெண்கள் கிளர்ந்திருக்கின்றார்கள். தம்மை சூழ்ந்துள்ள ஆணாதிக்க அடிமைத் தளைகளையும் சாதி, மத, இன, நிற, கலாச்சார.. இறுக்கங்களையும் உடைத்துக் கொண்டு அவர்கள் நிறைவலிவுடன் உயிர்த்தெழுகின்றார்கள். பறிக்கப்பட்டுள்ள தமது உரிமைகளுக்காக, நிராகரிக்கப்பட்டுள்ள தமது நலன்களுக்காக, மறுக்கப்பட்டுள்ள தமது சுதந்திரத்திற்காக, இவற்றினூடாக தமது வாழ்வுக்காக அவர்கள் உறுதியுடன் போராடுகின்றார்கள்.

வெவ்வேறு சமூகங்களில், பெண்களின் போராட்டங்கள் வேறுபட்ட வடிவங்கள், வேறுபட்ட இலக்குகளை கொண்டிருக்கின்ற போதிலும், இப்போராட்டங்கள் அனைத்தும் தமக்கேயுரிய குறிப்பான முக்கியத்துவங்களை கொண்டிருக்கின்றன. கருச்சிதைவு சட்டபூர்வமாக்கப்பட வேண்டும் என்ற ஐரோப்பிய பெண்களின் கோரிக்கைகளும் சுகாதார வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும் என்ற ஆசியப் பெண்களின் கோரிக்கைகளும் அவற்றுக்கேயுரிய முக்கியத்துவங்களை கொண்டிருக்கின்றன. முரண்பாடுகளினாலும் மோதல்களினாலும் கொந்தளித்து கொண்டிருக்கின்ற உலகில், பெண்களின் போராட்டமும் எழுச்சிகளும் ஒரு புதிய இயக்கத்தை, முரண்பாடுகளின் புதிய பரிமாணத்தை வெளிப்படுத்துகின்றன.

எழுச்சி கொண்டு போராடுகின்ற இன்றைய பெண்களின் மத்தியில், நமது பெண்களின் பாத்திரம் ஒரு பெரும் திருப்புமுனையை, ஒரு வரலாற்று பாய்ச்சலை குறிக்கின்றது. ஏடறிந்த வரலாற்றில் இதுவரை பதியப்பட்டிராத மகோன்னத அனுபவத்தை நமது பெண்கள் நிகழ்த்திக் கொண்டிருக்கின்றார்கள். நமது பெண்களின் வலிமையை, வீரத்தை, போரிடும் ஆற்றலை உலகம் பெருவியப்புடன் அவதானித்து கொண்டிருக்கின்றது. நிகழ்காலத்திலும் வருங்காலத்திலும் செயற்படுகின்ற பெண்கள் இயக்கங்களுக்கும் பெண்களின் போர்க்குணாம்சத்திற்கும் மனவலிமைக்குமான மாபெரும் முன்னுதாரணமாக நமது பெண்கள் திகழ்கின்றார்கள்.



ஒருபுறம், யுத்தமுனையில், தவிர்க்க முடியாத போர் அணியாக, வெற்றியை சாத்தியமாக்குகின்ற வீராங்கனைகளாக நமது பெண்கள் மாறியுள்ளார்கள். துணைப்படையினராகவோ, அல்லது ஆளணியை நிரப்புகின்றவர்களாகவோ இல்லாமல், யுத்தத்தில் நேரடியாக பங்கேற்கின்றவர்களாக, தாக்குதல்களை திட்டமிடுகின்றவர்களாக, தாக்குதல்களை தலைமையேற்று நடத்துபவர்களாக நமது பெண்போராளிகள் விளங்குகின்றார்கள். விடுதலைப்புலிகள் அமைப்பின் மிகச்சிறந்த போர்ப்பிரிவினரான மட்டுமன்றி, அந்த இயக்கத்தின் முதகெலும்பாகவும் நமது பெண்கள் மாறியுள்ளார்கள். எத்தகைய சூழ்நிலைகளிலும் எதிர்த்து முன்னேறுகின்றவர்களாக, வெற்றிக்கான சூழலை திடமாக உருவாக்குபவர்களாக நமது பெண்போராளிகள் திகழ்கின்றார்கள். பெண்களின் விடுதலைக்குரிய இன்னுமொரு போராட்ட வடிவத்தை -ஆயுதப் போராட்ட வடிவத்தை - நமது பெண்கள் தீர்த்துடனும் நிட்சய உறுதியுடனும் உருவாக்கி வருகின்றார்கள்.

மறுபுறம், நமது பெண்கள், மனவலிமையின் உச்சத் திரட்சியாக உருப்பெற்றிருக்கின்றார்கள். சிங்களப் படைகளின் அத்தனை அட்டூழியங்களையும் தாங்கிக் கொண்டு, சிறிலங்கா அரசின் அனைத்து அடக்குமுறைகளையும் சுமந்து கொண்டு நமது பெண்கள் பிரமாண்டமான உறுதியுடன் உயர்ந்து நிற்கின்றார்கள். குண்டுகளின் முழக்கங்களுக்கிடையிலும் வறுமைக்கும் நோய்க்கும் மத்தியிலும் கொடுந்துயரங்கள் மற்றும் இழப்புக்களின் சோக அனுபவங்களுக்கிடையிலும் நமது பெண்கள் தளரா உறுதியுடன் நமது தேசத்தை தாங்கி நிற்கின்றார்கள். யுத்தத்தின் திரண்ட சுமைகளை அவர்கள் முழுவதுமாக சுமக்கின்றார்கள். தம்மை நெருக்கும் அனைத்து அடக்குமுறைகளுக்கு எதிராகவும் பொங்கிக் குமுறும் கவிஞர்களாகவும் செறிந்த படைப்பாளிகளாகவும் நமது பெண்கள் பரிணமித்திருக்கின்றார்கள். சிறிலங்கா அரசின் திட்டமிட்ட இன ஒதுக்கல்களையும் யுத்த அழுத்தங்களையும் மீறி, கல்வித்துறையில் தமது ஆற்றல்களை அவர்கள் தொடர்ந்தும் வெளிப்படுத்தி வருகின்றார்கள்.

இவ்வாறு, யுத்தமுனையிலும் அதன் கொடுங்கதிர்கள் பாய்கின்ற சுற்றயல் வாழ்விடங்களிலும் நமது பெண்கள் மங்கா உறுதியுடனும் தீரத்துடனும் நிமிர்ந்து நிற்கின்றார்கள். நமது தேசத்தின் உயிரை, அதன் ஜீவத்துளியை வற்றாது சுரக்கின்றார்கள். இறுகிய கற்தரையிலும் வெடித்துத் துளிர்க்கின்ற ஒரு சின்னஞ்சிறு செடியையொத்த வலிவுடன், யுத்த சிதலங்களுக்கு மத்தியிலும் அழிவுகளுக்கு மத்தியிலும் நமது தேசத்தை அவர்கள் உயிர்ப்பிக்கின்றார்கள், மீண்டும் மீண்டும் உயிர்ப்பிக்கின்றர்கள். நமது தேசம் வீழ்ந்து விடாமலும் தனது மாண்பை இழந்து விடாமலும் அவர்கள் காத்து நிற்கின்றார்கள்.

எனினும் நமது தேசத்தை தாங்கி நிற்பதிலும், அதைப்பாதுகாப்பதிலும் நமது பெண்கள் வகிக்கின்ற முக்கியத்துவமும் முதன்மையும் இன்னமும் நமது தேசத்தினால், குறிப்பாக ஆண்களினால் உணரப்படவில்லை, ஏற்றுக் கொள்ளப்படவில்லை. பெண்கள் மீதான ஆணாதிக்க அடக்குமுறைகளும் சாதி, மத, கலாச்சார தளைகளும் இன்னமும் நமது பெண்களை கடுமையாக இறுக்கியுள்ளன. அவர்களின் சமத்துவநிலை, அவர்களின் உரிமைகள், அவர்களின் சுயம், நலன்கள்... என்பவை நமது தேசத்தின் அக்கறைக்குள்ளாகவில்லை. நமது சமூக அரசியல், பொருளாதார, கலாச்சார நிறுவனங்களில் நிறைந்துள்ள ஆணாதிக்க சாரம் இன்னமும் அகலவில்லை.

ஆயினும் என்ன! நமது பெண்போராளிகளின் கரங்களிலிருந்து முன்னோக்கிப் பாய்கின்ற ஒவ்வொரு ரவையும், தமக்குப் பின்னே, தம்மை அழுத்தி நிற்கின்ற ஆணாதிக்க நிறுவனங்களின் அடித்தளங்களின் மீது, நொறுக்கும் அதிர்வுகளை ஏற்படுத்துகின்றன. யுத்த சுமைகளிலிருந்து நிமிர்ந்தெழுகின்ற நமது பெண்களின் அசையா உறுதியானது, இறுகிய ஆணாதிக்க முறைமைகளின் மீது, சாதி, மத, கலாச்சார தளைகளின் மீது ஆழமான வெடிப்புகளை ஏற்படுத்துகின்றன. தமது சொந்த அனுபவங்களுக்கூடாக நமது பெண்கள் பெற்று வருகின்ற செழுமைமிக்க அறிவுத் திரட்சியானது, அவர்கள் மேல் கவிந்திருக்கின்ற அத்தனை பிற்போக்கு மரபுகளையும் அதிகார அமைப்புக்களையும் உடைத்து நொறுக்கும் வல்லமையை கொண்டிருக்கின்றன.

நமது பெண்களின் கரங்கள் ஏந்தியுள்ள துப்பாக்கிகளும் அவர்களின் நெஞ்சில் நிறைந்துள்ள மாபெரும் உறுதியும் வலிமையும் ஒரு புதிய சகாப்தத்தின் திறவுகோல்களாய் ஒளிர்கின்றன. நமது பெண்கள் யுத்தமுனைகளிலும் யுத்தசிதைவுகளிலும் மட்டுமல்ல, நமது தேசத்தை புதிதாய் வார்ப்பதிலும் வரலாற்று முன்னுதாரணமாய் அமைவார்கள். ஆம்! முதன்முதலாக ஆணாதிக்கத்தை அதன் வேரோடு அசைக்கப் போகின்ற மகோன்னத வரலாற்று நிகழ்வை நமது பெண்கள் சாதிப்பார்கள் விரைவில்!



நிராகரிக்கப்படுகிறோம்

மல்லிகைப் பூக்களாக்கி
நறுமணங்களில் மயக்கம் கொண்டீர்
நாணமும் பிழிந்தெடுத்து பின்
வீதிக்கு வீசப்பட்டவர்கள் நாம்.

சுரண்டற்காரர்களே!
வெந்து வெடித்து
திரண்டெழுகிறோம்
இன்று நாங்கள் நெருஞ்சிகள்!

காவேரியாகவும்
கங்கையாகவும்
நெளிந்து வளைந்து....
சில இடங்களில்
உங்கள் சுயநலன்களுக்காக
சுவர்களுக்குள் சிறைவைத்தும்....

ஒடுக்குபவர்களே!
பிய்த்தெறிந்து பெருங்கடல்களாய்
பொங்கி எழுகின்றோம்
போர்க்குணாம்சம் கொண்டு!

கருத்தொருமித்து
நாம்
காதலர்களாகி கலந்தபின்னர்
எங்கள்
கற்பைப் பறிகொடுத்துவிட்டதாய்....

வஞ்சகக்காரர்களே!
சுட்டுச் சிதைத்தபின்
குருதிக் குளமான
யோனிகளுக்குள்
தொடரும் உங்கள்
கொடூரங்கள்

வீரமற்றவர்களே!
தற்கொலைப்
போராளிகளாகிவிட்டோம்
உங்கள்
கரங்கள் கண்கள் மூச்சுக்கள்
இனிமேல் எம்மை
நெருங்கமுடியாதவாறு.

வஞ்சி உன் மென் இடை
பெண்மைக்கென்றே
இயற்கையின் கொடை
வர்ணிப்புக்களிலேயே
உங்கள் வாழ்க்கை!

நிறுத்துங்கள்!
நிறுத்துங்கள்!

வாடைக்காற்றுக்களல்லவே
இப்போது நாம்
சூறாவளிகளாகிவிட்டோம்.

— இத்தினி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வடக்கு -கிழக்கு இணைப்பு:

# ஒரு முடிந்த கதை!

சிறிலங்கா அரசியலில் மீண்டும் ஒரு பரபரப்பு ஏற்பட்டுள்ளது. நமது தேசிய பிரச்சினைக்கு, அரசியல் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காண்பதற்கான முயற்சிகள் மும்முரமாகியுள்ளன. சிறீலங்கா அரசுத் தலைவர், தமிழ்க் கட்சிகளை பலதடவைகள் சந்தித்துப் பேசியுள்ளார். தீர்வுப் பொதியை சகலரும் ஏற்கும் விதத்தில் திருத்தி அமைப்பதில் நீதி அமைச்சர் கடுமையாக உழைக்கின்றார், நோர்வே வெளிநாட்டமைச்சர், விடுதலைப் புலிகளின் அரசியல் பேச்சாளரையும் மற்றும் சிறிலங்கா அரசு தலைவர், வெளிவிவகார அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் போன்றோரையும் சந்தித்திருக்கின்றார். இவ்வாறு ஒருதொடரான நிகழ்வுகள் இடம் பெற்றுள்ளன.

நல்லது, நமது மக்களின் விடுதலைப் போராட்டம் சர்வதேச அக்கறையை ஈர்த்து விட்டது என்ற உண்மை நம் மக்களின் போராட்டத்திற்கு கிடைத்துள்ள வெற்றி எனக் கொள்வோம். எனினும் எமது மக்களின் போராட்டத்தின் மீது திரும்பியுள்ள சர்வதேச அக்கறையானது, சர்வதேச அரசுகளின் அக்கறையே என்பதை முதலில் புரிந்த கொள்வோம். இந்த சர்வதேச அரசுகளின் அக்கறை என்பது எப்போதும் இருமுகம் கொண்டது என்பதையும் பிற சமூகங்களின் விடயங்களில் அவை எப்போதும் தமது நலன்களுக்கு சாதகமாகவே தலையீடு செய்கின்றன என்பதையும் மனத்தில் இருத்துவோம்.

சர்வதேச அரசுகள் குறிப்பாக, ஏகாதிபத்திய மற்றும் நவகொலனிய அரசுகள் சிறிலங்காவில் தமது கணிசமான முதலீடுகளை கொண்டுள்ளன. எனவே இவை சிறிலங்கா அரசுடன் நெருக்கமான உறவுகளை கொண்டிருப்பதோடு, சிறிலங்கா அரசின் ஸ்திரத்தன்மையையும் அதன் தரகு முதலாளித்துவ பண்பையும் உறுதியாக பேணுவதில் அக்கறை கொண்டுள்ளன. எனவே நமது விடுதலை போராட்டத்தில் இவற்றின் தலையீடு என்பது, சிறிலங்கா அரசுக்கு சாதகமாகவும் அதைக் காப்பாற்றும் விதத்திலுமே அமையும் என்பதில் நமக்கு எச்சரிக்கையும் தெளிவும் புரிதலும் அவசியம். இத்தகைய முன்விளக்கத்தினூடாக சிறிலங்கா அரசின் இப்போதைய நகர்வுகள் குறித்து மதிப்பிடுவோம்.

மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துடனான அரசியல் பேச்சுவார்த்தை என்று விடுதலை புலிகள் அமைப்பும், தமிழ் மக்களின் வெவ்வேறு பிரிவினரும் உறுதியாக முன்வைத்த கோரிக்கையை, இதுவரை முற்றாக நிராகரித்து வந்த சிறீலங்கா அரசு, இப்போது அதை ஏற்றுக் கொண்டுள்ளது.

கூடவே, வடக்கையும் கிழக்கையும் இணைப்பது என்ற முடிவையும் சிறிலங்கா அரசு தற்போது எடுத்துள்ளது. தமிழீழ விடுதலைப் போராட்டம் ஆரம்பித்த நாளிலிருந்து இப்போதுதான் முதல் தடவையாக வடக்கு கிழக்கு இணைப்பை ஏற்க சிறிலங்கா அரசு முன்வந்துள்ளது. இவ்வாறு சிறிலங்கா அரசு தனது நிலையை தளர்த்தியிருப்பதானது, அரசியல் பேச்சுவார்த்தை தொடர்பாக நமது மக்கள் முன்வைத்த நிபந்தனைகளுக்கு கிடைத்துள்ள வெற்றி எனக் கொள்ள முடியுமா?

ஆம்! இவை எமது மக்களுக்கு கிடைத்துள்ள வெற்றிகளே. இந்த வெற்றிகளை நிறைந்த பெருமிதத்துடன் நாம் கொண்டாட முடியும். நமது மக்களுக்கு கிடைத்துள்ள இந்த வெற்றிகள் வெறும் கோரிக்கைகளினால் பெறப்பட்டவை அல்ல. மாறாக, சிறிலங்கா அரசுக்கு எதிரான ஒரு நீண்ட, கடினமான போராட்டத்தின் விளைவாக முகிழ்த்துள்ள முதல் வெற்றி அரும்புகள் இவை. இந்த வெற்றிகள் குறித்து நமது மக்கள் தலைநிமிர்த்தி பெருமை கொள்ள முடியும்.

நமது நிபந்தனைகள் எத்தகைய சூழ்நிலையில் வெற்றி பெற்றுள்ளன? சிறிலங்கா அரசின் ஆக்கிரமிப்பிலிருந்து தமிழீழத்தின் பெரும் பகுதிகள் விடுவிக்கப்பட்டிருக்கின்ற நிலையில், மேலும் பல பகுதிகளை விடுவிப்பதை நோக்கி விடுதலைப் புலிகள் இயக்கம் வெற்றிகரமாக முன்னேறிக் கொண்டிருக்கின்ற நிலையில் சிறீலங்கா அரசின் இத்தகைய “தளர்வுகள்” இடம்பெற்றிருக்கின்றன என்பது முக்கியமான விடயம். தென் தமிழீழத்தின் பெரும்பகுதியும், மத்திய தமிழீழம் அனேகமாக முழுவதும் சிறிலங்காப் படைகளின் ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், வட தமிழீழத்தின் நுழைவாயிலில் கொட்டப்படுகின்ற போர் முரசம் சிங்களப் படைகளின் செவிப்பறைகளில் பேரிடியாய் முழங்கிக் கொண்டிருக்கின்ற நிலையில், சிறிலங்கா அரசு மூன்றாந்தரப்பு இடையீட்டையும் வடகிழக்கு இணைப்பையும் ஏற்றுக் கொள்ள முன்வந்திருக்கின்றது.

எனினும் சிறிலங்கா அரசு இன்னமும் நமது போராட்டத்தின் அரசியல் சாரத்தையும் நமது மக்களின் தேசிய தனித்துவத்தையும் ஏற்றுக் கொள்ளவில்லை. அரசுக் கட்டமைப்பிலும் அரசியல் முறைமையிலும் முற்றான மாற்றங்களை ஏற்படுத்தி இங்குள்ள தேசங்களின் உரிமைகளையும அரசியல் தனித்துவத்தையும் உறுதிப்படுத்துவதற்கு அது சிறிதளவும் தயாராக இல்லை. மாறாக, சிறிலங்கா அரசுக் கட்டமைப்புக்குள் நமது மக்களின் உரிமைகளையும் அரசியல் தனித்துவத்தையும் கட்டுப்படுத்தவே இன்னமும் முயற்சித்து வருகின்றது. தனது அதிகார வரம்பிற்குள் நமது தேசத்தை அடக்கி வைக்கவே அது இன்னமும் திட்டமிடுகின்றது. இத்தகைய தனது நோக்கத்தையே, வடக்கு கிழக்கு இணைப்புக்கு உடன்படுவதாக அறிவித்திருப்பதன் மூலமும், மூன்றாம் தரப்பு இடையீட்டை ஏற்பதன் மூலமும் அது அடைய முனைகின்றது.

எமது போராட்டத்தை பொறுத்தவரை, வடக்கு-கிழக்கு இணைப்பு என்பது, முடிந்து விட்ட ஒரு கதையாகி விட்டது. நமது விடுதலைப் போராட்டமானது , வடக்கு-கிழக்கு இணைப்பு என்ற நிர்வாக பரிமாணத்தை கடந்து, தேசஅரசு அமைத்தல் என்ற உயர் அரசியல் பரிமாணத்தை அடைந்து விட்டது. நமது சுயாதீனமான அரசியல் வாழ்வுக்குரிய உத்தரவாதமாக அமையும் என்ற அடிப்படையிலேயே வடக்கு கிழக்கு இணைப்பு என்ற அரசியல் கோரிக்கை நமது மக்களினால் முன்வைக்கப்பட்டிருந்தது. நமது மக்களுக்கு தனியான அரசியல் முறைமையையும் தமது சொந்த வாழ்வை தீர்மானிப்பதற்கான உரிமையையும் உறுதிப்படுத்தும் என்ற எதிர்பார்ப்பிலேயே வடக்கு-கிழக்கு இணைப்பு என்பது நமது மக்களின் அரசியல் கோரிக்கைகளில் ஒன்றாக இருந்தது.

எனினும் சிறிலங்கா அரசு அக்கோரிக்கையை முற்றாக நிராகரித்து வந்திருப்பதோடு, வடக்கையும் கிழக்கையும் பிரிப்பதில் அது திட்டமிட்டும் தீவிரமாகவும் செயற்பட்டும் வந்திருக்கின்றது. வடக்கு கிழக்கு இணைப்பு என்ற கோரிக்கையானது, நமது மக்களுடைய அரசியல் அபிலாஷைகளின் கௌரவமான வெளிப்பாடு என்பதை உதாசீனப்படுத்தி, தனது ஆள்புல எல்லைக்குட்பட்ட ஏனைய மாகாணங்களைப் போன்ற, பெரிதும் நிர்வாக அதிகாரம் கொண்ட அலகுகளாகவே அவற்றை வகைப்படுத்த முயற்சித்து வந்துள்ளது.

சிறிலங்கா அரசின் இத்தகைய முயற்சிகளுக்கு எதிராக நமது மக்கள் ஒரு நீண்ட போராட்டத்தை முன்னெடுத்திருக்கின்றார்கள். சிறிலங்கா அரசின் ஆக்கிரமிப்பிலிருந்து நமது தாயகத்தை பாதுகாக்கவும் அதில் தமக்கென சொந்த அரசியல் அதிகாரத்தை நிறுவவும் நமது மக்கள் கடுமையாக போராடி வருகின்றார்கள். இத்தகைய போராட்டத்தின் விளைவாக, சிறிலங்கா அரசினால் நிர்வாக குறியீடுகளாக கருதப்பட்டு வந்துள்ள வடக்கு-கிழக்கு மாகாணங்கள், இப்போது தமிழீழம் என்ற அரசியல் வகையினமாக பரிணாமம் அடைந்து விட்டன.

இவ்வாறு நமது தாயகமானது அதன் உயர் அரசியல் பரிமாணத்தை அடைந்த விட்ட பின்பு, நமது அரசியல் தளத்தில் வடக்கு- கிழக்கு இணைப்பு என்பது அதன் முன்னைய அரசியல் அர்த்தத்தை இழந்து விட்டது. இப்போது அது ஒரு கடக்கப்பட்டு விட்ட அரசியல் எல்லையாகி விட்டது. இன்றைய நமது அரசியல் இலக்கு என்பது, சிறிலங்கா அரசுக் கட்டமைப்புக்குள் வடக்கும் கிழக்கும் இணைக்கப்படுவது அல்ல. மாறாக, நமது தாயகத்தில், - தமிழீழத்தில் - நமக்கென தனியான, ஒரு இறைமைமிக்க அரசியல் அதிகாரத்தை நிறுவுவதே. இவ்வாறு இன்றைய அரசியல் சூழலில், தனது அரசியல் முக்கியத்துவத்தை இழந்து விட்ட வடக்கு-கிழக்கு இணைப்பு என்பதைத்தான், இப்போது ஒரு மாபெரும் “நல்லெண்ணத்தின்” வெளிப்பாடாக சிறிலங்கா அரசு எமக்கு “தருவதற்கு” முன்வந்துள்ளது.

1960 களின் முற்பகுதியில், நமது மக்களின் ரத்தம் சிந்தப்படுவதற்கு காரணமாக அமைந்த “ஸ்ரீ” எழுத்து விவகாரத்தை, அதன் அரசியல் முக்கியத்துவம் முற்றாக மறைந்து விட்ட 1990களில் கைவிடுவதற்கு சிறீலங்கா அரசு எப்படி முன்வந்ததோ அதேபோன்றுதான், வடகிழக்கு இணைப்பு என்பது அதன் அரசியல் முக்கியத்துவத்தையும் அரசியல் அர்த்தத்தையும் இழந்து விட்ட இன்றைய நிலையில், அதை எம்மீது திணிப்பதற்கு இந்த அரசு முயற்சிக்கின்றது.

நமது அரசியல் கோரிக்கைகள் தொடர்பாக சிறிலங்கா அரசு எவ்வாறு செயற்பட்டு வந்திருக்கின்றது என்பதை பரிசீலிக்கும் ஒருவருக்கு பின்வரும் உண்மை சட்டென்று புலப்படும். நாம் முன்வைக்கின்ற ஒரு கோரிக்கையை முற்றாக மறுத்தும் அதற்கு எதிராகவும் செயற்படுகின்ற இந்த அரசு, எமது போராட்டத்தினூடாக நாம் அந்தக் கோரிக்கையின் அரசியல் எல்லையை கடந்து, அதைவிட உயர்ந்த எல்லைக்கு நகரும்போது, உடனே அது, கடக்கப்பட்டு விட்ட அந்த முன்னைய கோரிக்கையை ஏற்றுக் கொள்வதற்கு தயாராகி விடுகின்றது. அரசாங்க ஊழியர்களின் பதவியுயர்வுக்கு சிங்களமொழியில் சித்தியடைந்திருக்க வேண்டும் என்ற சட்டத்தை நீக்குதல், தமிழ் மொழியை அரசகரும மொழியாக்குதல், “ஸ்ரீ” விடயம்.. .என இந்த பட்டியல் நீளுகின்றது.

இப்போது, நமது மக்களின் போராட்டம் தமிழீழ விடுதலையை நோக்கி உறுதியாக முன்னேறுகின்ற நிலையில்தான், அதைத்தவிர்ப்பதற்கான ஒரு தந்திரோபாய முயற்சியாக, வடக்கு-கிழக்கு இணைப்புக்கு சிறிலங்கா அரசு உடன்பட்டுள்ளது. மூன்றாந்தரப்பு உதவியுடனும் சர்வதேச பிற்போக்கு சக்திகளின் ஆதரவுடனும் நமது மக்களுடன் அரசியல் ஒப்பந்தம் ஒன்றைச் செய்வதற்கும் அது தயாராக இருக்கின்றது.

எனினும் பெருந்தன்மை கொண்டவர்களே! இதைக் கேளுங்கள். உங்களிடமிருந்து நாங்கள் நிறையக் கற்றுக் கொண்டுள்ளோம். வரலாற்றில் எந்தத் தேசமும் ஏமாற்றப்படாத அளவுக்கு, எந்தச் சமூகமும் வஞ்சிக்கப்படாத அளவுக்கு நாங்கள் உங்களால் ஏமாற்றப்பட்டிருக்கின்றோம், உங்களால் வஞ்சிக்கப்பட்டிருக்கின்றோம். ஆங்கிலேய ஆக்கிரமிப்பின் இறுதிச் சகாப்தங்களிலிருந்து உங்கள் ஆதிக்க நடவடிக்கைகளின் கொடிய விளைவுகளை நாங்கள் சுமந்து வருகின்றோம். மறக்கப்பட்ட வாக்குறுதிகள், கிழிக்கப்பட்ட ஒப்பந்தங்கள்....என ஏராளம் அனுபவங்கள் எம் நினைவுகளில் நிறைந்துள்ளன. ஆகவே. மீண்டும் ஒருமுறை உங்கள் வாக்குறுதிகளை நம்புவதற்கு முன், உங்களுடன் ஒப்பந்தம் ஒன்றைக் செய்வதற்கு முன் நாங்கள் அதிகம் சிந்திக்க வேண்டியுள்ளது. ஆமாம் அதிகமாக. குருதித்தாரைகளுக்கூடாகவும் புதைகுழிகளுக்கூடாகவும் குண்டு முழக்கங்களினூடாகவும் நாம் சிந்திக்க வேண்டியுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெண்கள் தமது சமூக நிலையை உணர்தலும் அதற்கெதிராகக் குரல்கொடுப்பதும் 1600களில் ஆரம்பமாவதாக ஏடறிந்த வரலாறு குறிப்பிடுகிறது. ஆரம்பத்தில்தனிநபர்ரீதியாகத்தான்பெண்களது விழிப்புணர்வுக்குரல்கள்வெளிப்பட்டன. 17ம் நூற்றாண்டின் பொருளாதார அரசியல் வாழ்வுடன்கூடிய பாரிய சமூக மாற்றமானது பெண்களது வாழ்விலும் மாற்றங்களை ஏற்படுத்த பெண்களின் பொதுநலனின் அடிப்படையில் பெண்கள் அமைப்பாவதும் போராடுவதும் அதிகரித்தது. உழைப்பாளர்களாகவும் விடுவிக்கப்பட்ட அடிமைகளாகவும் வாழும் பெண்கள் தம்மை வேகமாக அமைப்பு வடிவத்திற்குட்படுத்திக் கொண்டனர். 1789இன் பிரெஞ்சுப் புரட்சியானது பெண்களது உரிமைப்போராட்டத்தில்ஒரு பாய்ச்சலை ஏற்படுத்தியது என்றால் அது மிகையில்லை. தீவிர பெண்ணிய சிந்தனைகள் அரங்கிற்கு வந்த காலமாக அது இருந்தது. பெண்ணுரிமை கோரும்எழுத்துகளும் பெண்களின் அரசியல் குழுக்களும் விரிவடைந்தன. தமது அடிப்படைத் தேவைகளுக்காக பெண்கள் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்தனர். எனினும் எதிர்பார்த்ததற்கு மாறாக மக்களை அடக்கிய குடியரசு எதிர் - பெண்ணிய நிலைப்பாட்டை எடுத்தது. பெண்ணுரிமைக்கழகங்கள் மூடப்பட்டன. முன்னணியில் திகழ்ந்த பெண் எழுத்தாளர்களும் பேச்சாளர்களும் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர். மரணதண்டனைக்கு உள்ளாக்கப்பட்டனர்.


சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் எனும் முழக்கத்துடன் நவீன அரசியல் வரலாற்றில் மனிதகுலம் முதலடி எடுத்து வைத்த கட்டத்தில் பெண்ணுரிமை மீதான எதிர்வினைகள் இவ்வாறு தான் ஆரம்பித்தன.

எனினும், தமது வீரமிக்க போராட்டங்களினூடாக பெண்களுக்கு கிடைத்த அனுபவத் திரட்சியானது பெண்களை மேலும் விழிப்புணர்வுடையவர்கள் ஆக்கியது. தமது உரிமைகள்பற்றி பெண்கள்பல தளங்களிலும் சிந்திக்கத் தொடங்கினர். ஐரோப்பாக் கண்டத்தில் மாத்திரமன்று அமெரிக்காக் கண்டத்திலும் பெண்களது அமைப்பு ரீதியான போராட்டங்கள் வளர்ச்சி பெற்றன. 1830 களின்பிரெஞ்சு உள்நாட்டுப்போருடன் பெண்களது செயல் வீச்சமும் போராட்ட பரப்பும் அதிகரித்தது. பெண் உரிமைக்காக செயல்படுபவர்கள் எனும் காரணத்தினாலேயே பெண்கள் கைது செய்யப்பட்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டனர். இதன் காரணமாக பெண்விடுதலைப்போராளிகள் நாடுகடந்து செல்வதும், அதன்விளைவாக நாடுவிட்டு நாடும் கண்டம் விட்டு கண்டமும் பெண்விடுதலைப்போராட்ட அனுபவங்கள் பரிமாறிக்கொள்ளப்படுவதும் உணர்வுத் தீ பற்றிக்கொள்வதும் நிகழ்ந்தது. இதன் தொடர்ச்சியாக பெண்களது குடியுரிமைக்கான மாநாடு 1848இல் செனெக்கா பால்ஸ் எனும் இடத்தில் நடைபெற்றது. இதை உலகின் முதலாவது பெண்கள் மாநாடு எனக்கொள்ளலாம்.

தமது அடிப்படை உரிமைகளுக்காக பெண்கள் மேற்கொண்டு வந்த போராட்டங்களில் மிகவும் தீர்க்கமான போராட்டமாக 19ம் நூற்றாண்டின் இறுதியிலும் 20ம் நூற்றாண்டின்தொடக்கத்திலும்நடைபெற்ற பெண்களின் வாக்குரிமைக்கான போராட்டம் இருந்தது. பல்வேறு வர்க்கங்களின் நலன்களும் இப்போராட்டத்தில் துல்லியமாகப்பிரதிபலித்தன. ஐரோப்பிய, அமெரிக்க, அவுஸ்திரேலிய கண்டங்கள் எங்கும் இப்போராட்டம்சமகாலத்தில்தீவிரம் பெற்றது. ஒருமித்த உணர்வு எங்கும் வியாபித்திருந்தது.

வாக்குரிமைக்கானப்போராட்டத்தை அதன் ஆரம்பத்தில் பூர்ஷ்வா வர்க்க கோரிக்கை என சமூக ஜனநாயக முகாம் (கம்யூனிஸ்ட்டுகள்) ஏற்கவில்லை. 1907ம் ஆண்டு ஜெர்மனியில் நடந்த இரண்டாம் அகிலத்தின்பேராயத்தில்இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டது. சமூக ஜனநாயகவாதிகளில் ஒரு பிரிவினர் ஆண்களின் வாக்குரிமையை வென்றுகொள்வதையே தமது பிரதான பணியாகக் கண்டனர். பெண்களுக்கு வாக்குரிமை கோருவது தொழிலாள வர்க்க ஆண்கள் வாக்குரிமை பெறுவதற்கு ஆபத்தாகிவிடலாம் எனக் காரணம் காட்டி பெண்களின் வாக்குரிமையை எதிர்த்தனர். எனினும் கிளாரா செட்கின் உட்பட்ட இன்னும் சிலர் இப்பிரச்சினையை அகிலத்தின் பேராயத்திலேயே தீர்க்கும்படி வாதாடினர். இறுதியில் பெண்களின்வாக்குரிமைக்காகப்போராடுவது எனும் முடிவை பேராயம் எடுத்தது.

சமூக ஜனநாயக இயக்கம் கிளை



பரப்பியிருந்த ஐரோப்பிய, அமெரிக்க, ஆசிய பிரதேசங்களில் அதன் கட்டுக்கோப்பான அமைப்புகள் இயங்கிவந்தன. பெருமளவு உழைக்கும் வர்க்கப் பெண்கள் இவற்றில் பங்காற்றி வந்தனர். ஜேர்மனியில் பெண்கள் அரசியலில் ஈடுபடுவது சட்டவிரோதமாக இருந்த 1900 இலேயே அங்கு “பெரியளவிலான மிகவும்சிறப்பாக அமைப்பாக்கப்பட்ட தீவிர போர்க்குணாம்சம் கொண்ட சோசலிச பெண்களது இயக்கம்செயற்பட்டு வந்தது”. கிளாரா செட்கினை ஆசிரியராகக் கொண்டு சமத்துவம் எனும் பெயரில் வெளி வந்த பெண்கள் பத்திரிகையின் விநியோக எண்ணிக்கையே ஒரு லட்சத்துக்கும் அதிகமானதாயிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. அக்காலகட்டத்தில் ஜேர்மனி, ஒஸ்ட்ரியா, அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகளில்சோசலிசப்பெண்களின்பலமான அமைப்புகள்இயங்கிவந்தன.

மிகவும்விரிவான தளத்தில்செயற்பட்டு வந்த சமூக ஜனநாயக இயக்கப் பெண்களால்சர்வதேச அளவில் பெண்களுக்கான வாக்குரிமைப் போராட்டத்தை திட்டமிட்டு முன்னெடுக்க முடிந்தது. 1910இல் கோபன் ஹேகன் நகரில் நடைபெற்ற சோசலிச பெண்களது இரண்டாவது சர்வதேச மாநாடானது, உலகளாவிய அளவில் பெண்ணின்வாக்குரிமையை வலியுறுத்தும் விதமான சர்வதேச தினமொன்றின் அவசியம்குறித்து தீர்மானமெடுத்தது. 1908ம் ஆண்டு மார்ச் 8ம் திகதி நியூயார்க் நகர பஞ்சாலை தொழிலாளப் பெண்கள் நடாத்திய போர்க்குணாம்சமிக்க போராட்ட நாளையே இம்மாநாடு பெண்கள் தினமாக



# சர்வதேசப் பெண்கள் தினம்

நிச்சயித்தது. மார்ச் 8 பெண்கள் தினம் தோன்றியதற்கு இதுவே அடிப்படையாகும். இதில்கிளாரா செட்கினின்தலைமைத்துவம் வரலாற்றால் என்றும் நினைவு கூறப்பட வேண்டியதாகும்.

பெண்களின் வாக்குரிமையை வலியுறுத்தும் சர்வதேச தினத்தை முன்னிட்டு ஜேர்மனியிலும் ஒஸ்ட்ரியாவிலும் விரிவான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. குழுக்கள் உருவாக்கப்பட்டன. பிரச்சார ஊர்வலங்கள், கூட்டங்கள் நடைபெற்றன. செய்தித்தாள்களுக்கென விசேட கட்டுரைகள் தயாரிக்கப்பட்டன. குறிப்பிட்ட தினத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பே விசேட செய்திப்பத்திரிகைகள் விநியோகிக்கப்பட்டன. 1911ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8ம் திகதி ஜேர்மனியில்“பெண்களுக்கு வாக்குரிமை” எனும் முழக்கத்துடன் பெண்களின் செயற்பாட்டு நாள் வெளிப்பட்டது. ஒஸ்ட்ரியாவில் “பெண்கள் தினம்” எனும் பதாகையின் கீழ் 30,000 பெண்களும் ஆண்களும் பிரமாண்டமான வீதி ஊர்வலம் நடத்தினர். அதன் பின்னர் சர்வதேச பெண்கள் தினம் ஒரு வருடாந்த நிகழ்வாகியது.

1911ம் ஆண்டின் முதலாவது சர்வதேச பெண்கள் தினம்பற்றி ரஷ்ய புரட்சிகர பெண் தலைவரான அலெக்சாந்திரா கொலந்தாய் பிற்காலத்தில் இவ்வாறு கூறினார்: “ஜேர்மனியும் ஒஸ்ட்ரியாவும் பெண்களின் கொந்தளிக்கும்கடலாக மாறியிருந்தன. சிறிய நகரங்கள் முதல் கிராமங்கள் வரை எல்லாவிடங்களிலும்கூட்டங்கள்ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. தங்கள்இருப்பிடங்களை பெண்களுக்கு விட்டுத்தரும்படி தொழிலாளரிடம் கேட்குமளவுக்கு கூடங்கள் நிரம்பி வழிந்தன. நிச்சயமாக உழைக்கும் பெண்களின் போர்க்குணாம்சத்தை வெளிப்படுத்திய முதல்நிகழ்வாக இது இருந்தது. ஆண்கள் குழந்தைகளை கவனித்துக் கொண்டு வீட்டிலிருக்க அவர்களின் கட்டுப்பாட்டில் “வீட்டு மனையாளாக” இருந்த பெண்கள் கூட்டங்களுக்கு சென்றனர்”.

தமது தலைவிதியை தமது சொந்தக் கரங்களில்எடுத்துக் கொண்ட உழைக்கும் பெண்கள்தமது விடுதலைக்கான போராட்ட ஆற்றலை உயர்ந்த பட்சம் வெளிப்படுத்தினர். இவர்களின்தலைமையில்சமூகத்தின் ஏனைய வர்க்கப் பிரிவுகளைச் சார்ந்த பெண்களும் தமது உரிமைகளை வென்று கொள்ளக் கூடியதாயிருந்தது. புரட்சிகர முகாமிலிருந்த உழைக்கும்வர்க்கப்பெண்களின் தலைமையில் தான் பெண்ணுரிமைப் போராட்டம் திட்டமிட்ட முறையில்முன்னெடுக்கப்பட்டது என்பதும் பெண்களுக்கான சர்வதேச தினம் உருவாக்கப்பட்டது என்பதும் இன்று ஆதிக்கப்பிரிவுகளினால் இருட்டடிப்பு செய்யப்பட்டிருக்கலாம். எனினும் வரலாற்றைத்திரும்பிப்பார்த்தால்ஸ்தாபன வடிவிலான பெண்ணுரிமை அமைப்புகள் உழைப்பாளிப் பெண்களினாலேயே முதலில் உருவாக்கப்பட்டன என்பது நிரூபணமாகும். இவர்களுடன் அமெரிக்க கறுப்பினப்பெண்களும் தோளோடு தோள் நின்றனர் என்பதும் வரலாற்றில் அழியாப்பதிவுகளாகும்.

பெண்கள்தமது சமூக நிலையை மாற்றியமைப்பதற்கான தொடர் போராட்டத்தில் தமது உரிமைப் போராட்டத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும்தினமாக, தமது உழைப்பின் பெருமதியை, சுய அடையாளத்தை, கௌரவத்தை, ஆளுமையை பிரகடனப்படுத்தும் தினமாக சர்வதேச பெண்கள் தினத்தை நிச்சயித்தனர். சர்வதேச பெண்கள் தினம் என்பது உலகெங்கும் வாழும் பெண்களை உணர்வுகளால் சங்கமிக்கச் செய்யும் நாளாகும். எல்லாவற்றிற்கும் மேலாக உழைப்புடனும் போராட்டத்துடனும் பிணைந்த பெண்கள் தமது முத்திரையை உலக வரலாற்றில் பதித்த தினமாகும்.

இத்தினத்தில் ஈழத்தமிழ்ப்பெண்களான நாமும் நமது வரலாற்றை, வாழ்வைத் திரும்பிப்பார்ப்போம். ஆசிய - தமிழ் சமூகத்திற்கேயுரிய நிலப்பிரபுத்துவ சிந்தனைமுறைமையுடன்கூடிய ஆணாதிக்க அடக்குமுறைகளை ஒருபுறம் எதிர்கொண்டு வந்த நிலையிலும், நமது தாய்மாரும் சகோதரிகளும் காலங்காலமாக வழங்கிவரும் உழைப்பு இத்தேசத்தின் முதுகெலும்பாக திகழ்கிறது. யுத்தத்தின் கோரக்கெடுபிடிகளின் நடுவில் தமது கரங்களால் நிலத்தை உழுது, பயிர்விதைத்து தேசத்திற்கு உணவூட்டுகின்றனர். நமது தேசத்தின் விவசாயத்துறையில் பெண்களது சக்தியே பெருமளவில்பிரயோகிக்கப்பட்டு வருகிறது. பல்வேறு சமூகத்தடைகளையும்எதிர்த்துக் கொண்டு அறிவுத்துறையிலும் நமது பெண்கள் கணிசமான பாத்திரம் ஆற்றிவருகின்றனர். கல்வியிலும் அறிவுத்துறையிலும் நமது பெண்கள் வெளிப்படுத்தும் ஆற்றலானது ஆண்களுக்கு சமாந்தரமாக இருப்பதை யாரும் மறுக்க முடியாது.

நமது தேசத்தின் கிராமியக்கைத்தொழிலானது பெண்களையே மையப்படுத்தியிருக்கிறது. யுத்தம் இதில் சிதைவை ஏற்படுத்தியிருப்பினும்கூட பெண்கள்தமது பாரம்பரிய

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# முஸ்லிம் பெண்களும் அடிப்படை உரிமைகளும்

1990களின் முன் தமது சொந்த மண்ணில் தமக்கேயுரித்தான கலாச்சார வாழ்வியல் முறைமைகளுடன் கூடிய சுதந்திரமானதொரு வாழ்வை வட தமிழீழ முஸ்லிம் பெண்கள் அனுபவித்து வந்தனர். தமது சமூகத்திற்கேயுரிய குறிப்பானதும் மற்றும் பொதுவானதுமான ஆணாதிக்க அடக்குமுறைகளை ஒருபுறம் எதிர்கொள்ளினும் கூட மறுபுறம் சொந்த மண்ணில் வாழ்வதனூடாக பெண்களால் தமக்கான ஒரு வாழ்வை உருவாக்கிக்கொள்ளக்கூடியதாயிருந்தது. விவசாயம், சிறுகைத்தொழில், சிறுவியாபாரம்,… ஆகிய பிரதேசம் சார்ந்த பெண்களின் பாரம்பரியத் தொழில்களில் பெண்கள் ஈடுபட்டு வந்தனர். அடிப்படைக் கல்வி மற்றும் உயர்கல்வி பெற்றுக்கொள்ளவும் மூளையுழைப்பில் ஈடுபடுவதற்குமான வாய்ப்புகளையும் வளங்களையும் கொண்டிருந்தனர். அறிவுத்துறையில் வேகமாக முன்னேறியும் வந்தனர். யுத்த கெடுபிடிகளின் மத்தியிலும் தமது சொந்த வாழ்விடத்தில் தமது உறவுகளுடன் கூடிவாழ்வதனூடாக கிடைக்கப்பெறும் கூட்டு வாழ்வின் மகிழ்ச்சி, பாதுகாப்புணர்வு, எதிர்காலம் பற்றிய திட்டங்கள்... ஆகியவற்றைக் கொண்டிருந்தனர்.

எனினும் 1990ம் ஆண்டு முஸ்லிம் தேசத்தின் மீது திணிக்கப்பட்ட தேசிய அடக்குமுறையுடன் கூடிய வாழ்விட அபகரிப்பானது முஸ்லிம் பெண்கள் அதுவரை அனுபவித்து வந்த தமது அடிப்படை உரிமைகளுடன் கூடிய நலன்களை இழக்கக் காரணமாயிற்று. ஒரு சமூகம் பாதிக்கப்படும் பொழுது பாதிப்பினை அதிகமாக அனுபவிப்பவர்கள் அச்சமூகத்தின் விளிம்பு நிலையில் வாழும் பெண்களே. ஒரு தேசம் துன்பங்களை சுமக்கையில் கூடுதல் துன்பங்களை சுமப்பவர்களாக பெண்களே உள்ளனர். வடதமிழீழ முஸ்லிம் மக்கள் தமது பாரம்பரிய வாழ்விடங்களிலிருந்து துரத்தியடிக்கப்படுகையில் இத்தேசத்துப் பெண்கள் அனுபவித்த, இன்றுவரை அனுபவித்து வரும் துயரங்கள், சுமைகள் எவ்வகையிலும் குறைத்து மதிப்பிடப்பட முடியாதவை. "அகதிமுகாம் தேசமாக" வாழ நிர்ப்பந்திக்கப் பட்டிருக்கும் வட தமிழீழ முஸ்லிம் மக்களின் வாழ்வானது தமது தேசிய எதிர்காலம் எவ்வாறு அமையும் என்பது பற்றிய கற்பனையைக் கூட செய்ய முடியாதளவுக்கு பலவீனப்படுத்தப் பட்டிருக்கிறது. இந்நிலையில் இப்பத்து வருட கால தேங்கிய வாழ்நிலையானது பெண்களின் நிலையில் மேலும் பின்னடைவுகளையே ஏற்படுத்தியுள்ளது. அந்நிய இடத்தில் பெண்களின் ஆளுமை, சுயகௌரவம், சுய அடையாளம், தனித்துவம் கேள்விக்குள்ளாக்கப்படுகிறது.

முஸ்லிம் பெண்கள் மீதான தேசிய அடக்குமுறையின் காரணமாக:

- முஸ்லிம் தேசத்தின் சரிபாதியானவர்களும், தேசத்தின் இயக்குசக்தியுமாக திகழும் பெண்களது அடிப்படை உரிமையான தேசிய வாழ்வுக்கும் இருத்தலுக்குமான உரிமை மறுக்கப்பட்டிருக்கிறது. அகதிமுகாம் வாழ்க்கைக்கு பெண்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

- பெண்களின் அடிப்படைத் தேவைகளான பாதுகாப்பு, இருப்பிட வசதி, சுகாதார வசதிகள் அனைத்தும் மறுக்கப்பட்டிருக்கின்றன. தண்ணீர் தட்டுப்பாடும், மலசல கூட வசதியின்மையும் பெண்கள் மத்தியில் சுகாதாரக் கேட்டை ஏற்படுத்தியுள்ளது.

- கிடுகுகளாலான சிறிய குடிசைகளில் பெண்களின் பிரத்தியேகத் தேவைகளுக்கான மறைவிட வசதிகளின்மை.

- பொருளாதார வறுமை உச்சத்தில் நிலவுகிறது. போஷாக்கின்மையால் பெண்கள் பாதிக்கப்படுகின்றனர். போஷாக்கற்ற குழந்தைகள் பிறக்கின்றன.

- விவசாயக் கூலி வேலையே பெண்களுக்கு இன்று கிடைக்கும் வேலையாயுள்ளது. எனினும் ஊரவருக்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது. ஆட்கள் இல்லாவிட்டால் அல்லது அதிகம் தேவைப்படும் பட்சத்தில்தான் இந்தப் பெண்களுக்கு வேலை வழங்கப்படும். கூலியிலும் பாரபட்சம் நிலவுகிறது. வேற்றிடத்தை சார்ந்த பெண்களாயிருப்பதால் கூலியை பேரம் பேச முடியாத நிலை.

- சில பெண்களின் கணவன்மாரும் சகோதரர்களும் தமிழ் போராட்ட தரப்பினால் படுகொலை செய்யப்பட்ட நிலையில் முற்றிலும் பெண்களே குடும்பத்தை போஷிக்க நேர்ந்துள்ளது.

- சிங்கள மொழி தெரியாததால் வெளியில் உழைப்புத் தேடி செல்கையில் முகங்கொடுக்கும் கெடுபிடிகள்.

- வறுமை சில பெண்களை பாலியல் தொழிலாளர்களாக்கி விட்டுள்ளது.

- ஆண்கள் இல்லாத குடும்பத்துப் பெண்களுக்கு பாலியல் தொந்தரவுகளும் நிர்ப்பந்தங்களும் ஏற்படும் நிலைமை.

- முகாம்களிலிருந்து இளம்பெண்கள் கல்வி கற்க தூர இடங்களுக்கு செல்கையில் ஊரிலுள்ள ஆண்களினால் ஏற்படும் தொந்தரவு காரணமாக சில பெண்கள் படிப்பை இடையில் நிறுத்திவிட்டுள்ளனர்.

-பல்கலைக்கழக அனுமதி கிடைத்தும் பொருளாதார நிலைமை காரணமாக கல்வியைத் தொடர முடியாத நிலை சில பெண்களுக்கு.

இத்தகவல்களின் அடிப்படையில் பார்க்கும் போது பாதிக்கப்பட்ட தேசத்துப் பெண்கள் எனும் வகையில் வட தமிழீழ முஸ்லிம் பெண்கள் எதிர்கொண்டு வரும் சமூக, பொருளாதார, அரசியல் நிலைமையானது இவர்களின் முன்னோக்கிய வளர்ச்சிக்கு பாரிய முட்டுக்கட்டையாக வேயுள்ளது. தமது சொந்தப் பிரதேசத்தில் வாழ்வதற்கான தேசிய உரிமை, தமது உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கான அடிப்படை ஜனநாயக உரிமை, பாதுகாப்புடன் கூடிய வாழ்வுக்கான உரிமை, தமது கலாச்சாரம் மற்றும் தேசிய அடையாளத்தை பேணி வளர்ப்பதற்கான உரிமை, சுகாதாரம் - கல்வி - தொழில் வசதிகளை பெற்றுக்கொள்வதற்கான உரிமை, சமூக ரீதியான அபிவிருத்தி - சுய ஆளுமை அடைவதற்கான உரிமை… யாவும் மறுக்கப்பட்ட நிலையில் முஸ்லிம் பெண்கள் உள்ளனர்.

இந்த இக்கட்டான சூழலிலும் இப் பெண்கள் தமது மனோதிடத்தை இழக்கவில்லை. தம்மீது திணிக்கப்பட்டிருக்கும் பற அடக்குமுறைகளையெல்லாம் எதிர்த்துக் கொண்டு தமதும் தம்மை சார்ந்திருப்பவர்களினதும் அடிப்படை உயிர்வாழ்வுக்கான அன்றாடப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதன் மூலம் தமது தேசத்தின் வாழ்வை மீளக் கட்டியமைக்கின்றனர். இப்பத்து வருடகால இடம்பெயர் வாழ்வில் அந்நிய சூழல் ஏற்படுத்தும் இடர்களையும் எதிர்த்துக் கொண்டு வாழும் மனவலிமையை முஸ்லிம் பெண்கள் வளர்த்துக் கொண்டுள்ளனர். இதன் மூலம் தமது தேசத்துப் பெண்களுக்கு மாத்திரமல்ல சக தேசப் பெண்களுக்கும் ஆதர்ஷமாகத் திகழ்கின்றனர். இது பெண்களெனும் வகையில் நாமனைவரும் பெருமைகொள்ளத்தக்க விடயமாகும்.

"பிறிதொரு தேசத்தை அடக்கும் எந்த தேசமும் தன்னளவில் சுதந்திரமானதல்ல" இது பெண்களான நமக்கும் பொருந்தும். நமது தேசத்தினால் இன்னொரு தேசம் அடக்கப்படுகையில், அத்தேசத்தின் பெண்கள் அடக்கப்படுகையில் அதைப் பார்த்துக் கொண்டு நாம் மௌனித் திருப் போமானால் நம்மளவில் நாமும் அடிமைகள் தாம். எம்முடன் கூடி வாழ்ந்த, நாம் வாழும் தாயகத்தையே தமதும் தாயகமாகக் கொண்ட முஸ்லிம் தேச சகோதரிகளை அகதிமுகாம்களில் வாழத் தள்ளிவிட்டு நாம் மாத்திரம் எப்படி விடுதலையடைய முடியும்? சுதந்திர தமிழீழத்தில் ஒரு பகுதி பெண்கள் தேசிய அடக்குமுறையையும் அதன் விளைவாக பல்வேறு சமூகத் துயரங்களையும் அனுபவித்துக் கொண்டிருக்கையில் எங்ஙனம் தமிழீழ ஜனநாயகக் குடியரசு பெண்ணுரிமையை முன்னெடுக்கும் அரசாயிருக்க முடியும்?

வட தமிழீழ முஸ்லிம் பெண்கள் இன்று அனுபவித்துவரும் தேசிய அடக்குமுறையுடன் கூடிய சமூக நிலைமைகளுக்கு தமிழ்த்தேச பெண்களான நாமும் பொறுப்பேற்க வேண்டியவர்களாயிருக்கிறோம். நமது சக தேச சகோதரிகளின் அடிப்படை உரிமைகளில் ஒன்றான தேசிய உரிமைக்காக குரல் கொடுப்பதும், நமது தேச அரசியல் தலைமையின் முஸ்லிம் தேசத்தின் மீதான அடக்குமுறை நிலைப்பாட்டிற்கெதிராக போராடுவதும் நமது தார்மீகக் கடமையாகும். இதனூடாகவே நம்மால் முஸ்லிம் பெண்களுடனான சகோதரித்துவ உறவை கட்டியெழுப்ப முடியும். இந்த 21ம் நூற்றாண்டின் முதலாவது பெண்கள் தினத்தில் ஈழத்தமிழ்ப் பெண்களான நாம் பிரக்ஞையில் கொள்ள வேண்டிய முக்கிய விடயங்களில் ஒன்றாக இதுவுள்ளது.

# திருகோணமலை சிங்கள அரசதிபர்

திருகோணமலையின் மணிக்கூட்டு சந்தியில் இருந்து கோணேசர் கோவில் போகும் பகுதியில் தொடர்ச்சியாக சிங்கள குடியேற்றங்கள் நடைபெற்றுவருகின்றது. இது சிங்கள அரசின் சட்ட வரைகளுக்கே எதிரானதாக அப்பட்டமான அடாத்தாக நடைபெற்றுவருகின்றது என்பது ஒருபுறம் இருக்க, அண்மையில் இக்காணியில் உரிய முறையில் அனுமதிபெற்று மாகாணசபை சுகாதார அமைச்சினால் ஒரு ஆயுள்வேத வைத்தியசாலை அமைக்க தீர்மானிக்கப்பட்டு அதற்கான சகல ஆரம்ப திட்டங்களும் பூர்த்தியாகி வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் சிங்கள அரசாங்க அதிபர் நேரடியாக வேலைதளத்திற்கு சென்று உடனடியாக வேலைகளை நிறுத்துமாறு உத்தரவிட்டு உள்ளார். எந்த அரசாங்கம் இருந்தாலும் இந்த சிங்கள அதிகாரிக்கு படைத்தளபதிக்குரிய சகல அதிகாரங்களுக்கு நிகராக செல்வாக்கு தரப்பட்டிருந்தமையால் இந்த கட்டளையை எதிர்க்க தமிழ்தரப்பில் எவரும் துணியவில்லை. மேலும், இதனை அம்பலப்படுத்தற்கே அச்சம் கொண்டவர்களாக உள்ளனர்.

கடந்த காலத்தில், திருமலையில் நகரசபையினால் அமைக்கப்பட்ட மக்கள் சந்தையை திறக்க விடாமல் செய்ததில் இந்த சிங்கள அரசாங்க அதிபரும், படைத் தலைமைகளும், கொழும்பிலுள்ள சிங்கள ஆதிக்க சக்திகளும் கூட்டமைத்து செயற்பட்டனர். ஒரு சந்தை விடயத்திற்கே இப்படியா? இவர்களிடம் இருந்து நாம் அதிகார பகிர்வை எதிர்பார்ப்பது நடக்கும் காரியமா? என்ற கேள்விகள் நமது தேசம் எங்கும் வெடித்தெழுந்தது.

சிங்கள அரசு அதிகாரிகள், தமது கட்சி பேதங்களை மறந்து தமது அதிகார இருப்பை பேணவும், ஆக்கிரப்பு நோக்கத்தினை வலுப்படுத்தவும் மிகவிழிப்புடனும், தந்திரமாகவும், கூட்டாகவும் தமது எல்லைகளை தாண்டியும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்கள். இந்த நடடிக்கைகளை வெறுமனே கோரிக்கைகளாலும் தூதுக்குழுக்கள் சென்று கதைப்பதாலும் நிறுத்திவிட முடியாது என்பது மீண்டும் மீண்டும் பெற்ற கசப்பான படிப்பினைகள். இவர்களின் அதிகாரத்திற்கு முடிவு கட்டி அவர்களின் சொந்த இடத்திற்கு அனுப்பும் நேரம் விரைவில் வரும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புகலிடங்களிலும் போராடும் பெண்கள்!

‘ஆண்களும் பெண்களும் சமத்துவமுடைய ஒரு உலகினை கற்பனைசெய்து பார்ப்பதென்பது இலகுவானகாரியம்தான். அப்படிப்பட்ட ஒரு சமத்துவமான ஓர் உலகினைத்தானே சோவியத் புரட்சியும் சத்தியம் செய்திருந்தது. ஆண்களைப் போன்றே பெண்களும் ஒரேமாதிரியாக வளர்த்து உருவாக்கப்படல் வேண்டும், இருபாலினருக்கும் சமத்துவமான வேலை விதிமுறைகள் மற்றும் சம சம்பளம்......” (சிமோன்தீபூவா - இரண்டாவது பாலினம்)

- பெண் ஆண் சமத்துவத்தினைக் கோரி, பெண்களின் விடுதலைக்கான சிந்தனைகளைபலபடைப்புகளாகஎமக்குத் தந்து சென்ற சிமோன்தி பூவா.

- தனதுடலை எதிரிகள் சிறைவைத்த போதும் விடுதலை உணர்வுடனும் கருத்துக்களைத் துணிச்சலுடன் வெளியிட்டு சமரசமற்ற புரட்சிகர அரசியல் நிலைப்பாட்டுடன் இறுதிவரையில் போராடி படுகொலைக்குள்ளான றோசா லக்சம்பேர்க்.

- உழைக்கும் வர்க்கப் பெண்களின் விடுதலைக்காகவே இறுதி மூச்சுவரை வாழ்ந்து மடிந்த கிளாரா செட்கின்.

- இலட்சக்கணக்கான யூதமக்களில் ஒருத்தியான சிறுமியாக யேர்மனிய தேசிய கொலைவெறிக்குப் பயந்து மறைவுவாழ்வு வாழ்ந்து, அந்த வாழ்வின்போது தனது எண்ணங்களை நாட்குறிப்புக்களாக விட்டுச் சென்ற அன்பிராங்.

இன்னுமின்னும் பெண்களின் உரிமைகளுக்காகவும் விடுதலைக்காகவும் தமது கருத்துக்களைக் கூறியும், போராடியும் வாழ்ந்த வாழ்கின்ற பெண்களின் தேசங்களில்ஈழத்தமிழ்ப்பெண்களான நாம் இன்று வாழ்கிறோம்!

அகதிகளா, கறுப்பிகளாக, ஆணாதிக்கவாதிகளின் மனைவிகளாக, எம்மைப் புரிந்துகொள்ளமுடியாத, விரும்பாத பிளாஸ்ரிக் தமிழ்க் கலாச்சார மாலைகளை அணிந்த பெற்றோரின் அடங்கிப்போகின்ற இளம் பெண்பிள்ளைகளாக, சிறுமிகளாக பவுன்சுக்கும், மார்க்குகளிற்கும், டொலர்களுக்கும், பிறாங்குகளிற்கும் விலைபட்டுப் போகிற சகோதரர்களின் தங்கைகளாக, தமக்கைகளாக, மனைவிகளாக பெண்களாகப்புகலிடங்களில்வாழ்கிறோம்.

சிங்கள பேரினவாத அடக்குமுறைகளுக்கும், தமிழ் விடுதலை இயக்கங்களின் தடைகளுக்கும், கோரக் கொலைகளுக்கும், பெருந்து வெடித்த யுத்தத்திற்கும், மரண ஓலங்களுக்கும் பயந்து புகலிடம் வந்தவர்கள் தான் நாம்.

புகலிடத்தில்தமிழ்ப்பெண்களான நாம் இனவாதம், மொழிப்பிரச்சினைகள், அன்னிய பலகலாச்சாரங்கள், நடைமுறைகள் என்று பல பிரச்சனைகளை ஒரேநேரத்தில் முகங்கொடுக்கவேண்டியவர்களாகவிருக்கிறோம். இன்நிலையில் ஆணாதிக்கம் தனது கடமையை எந்த ஒரு கேள்வியுமற்று, மனிதாபிமானமற்று தனதுபோக்கில் செயற்பட்டு தமிழ்ப்பெண்களாகிய எம்மை அடக்கி ஒடுக்கிவருகிறது.

எம்மை ஒடுக்குவதற்கு ஆணாதிக்கம் வைத்திருக்கும் ஆயுதங்களில் பிரதானமானது தமிழ்க் கலாச்சாரம் பண்பாடு என்பதாகும். இந்த தமிழக்கலாச்சாரம்பண்பாடு என்பதுதான் என்ன? இது ஆண்களுக்குத் தேவையற்றதா? பொட்டுவைத்து சேலை அணிந்து தாய் தந்தையரின், கணவரின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் தமிழ்ப் பெண்கள் சிறந்த தமிழ்ப்பெண்களாகக் கருதப்படுகின்றனர். கடுங் குளிரிலும் எமது சகோதரிகள் நடுங்கி நடுங்கி சேலைகளுடன் ஐரோப்பிய வீதிகளில் வலம்வருவதுதான் தமிழ்க் கலாச்சாரமா?

தான் இணைந்து வாழப்போகும் தன் துணைவனை தானே தெரிவுசெய்யும் உரிமையை பெண்களுக்கு மறுத்து தங்களின் விருப்பிற்கேற்ப வெட்கமில்லாமல் விலையும்பேசி திருமணம்முடித்துக்குடுப்பதுதானே எங்கள் தமிழ்க் கலாச்சாரம்?

கடின உழைப்பில் உடல் களைத்து வரும் மனைவியர் மீண்டும் வீட்டுவேலைகளில் ஈடுபடும்போது கதிரைகளுக்குள் இருந்து கணவன்மார்கள் காலாட்டியவாறு ரெலிவிசன்கள் பார்ப்பதுதான் நாம் நெஞ்சு நிமிர்த்திச்சொல்லும் தமிழ்க் கலாச்சாரம்?

பெண்கள் அடித்துத் துன்புறுத்தப்படுவது மட்டுமின்றி வன்புணர்ச்சிக்கும் உள்ளாக்கப்படுகிறார்கள்.(புகலிடங்களில் தற்கொலை செய்துகொண்ட தமிழ்ப்பெண்கள்எத்தனைபேர்கள்?) இந்தக்கலாச்சாரம் தானே நாம் பெருமையுடன் கூறிக்கொள்ளும் தமிழ்க்கலாச்சாரம்?

புலம் பெயர் நாடுகளில் நமது பெண்களின் இந்த நிலையை மாற்றியமைப்பதும் இன்று எம்முன்னுள்ள பிரதான பணியாயுள்ளது. புகலிடம் முழுவதுமே குறைந்தளவில் தான் விழிப்புணர்வுகொண்ட தமிழ்ப் பெண்கள் இருக்கிறார்கள், பெண்விடுதலைக்காகப் போராடுகிறார்கள் என்பது உண்மையே. எனினும் நாங்கள் எழுதுகிறோம். சந்திக்கிறோம். சிந்திக்கிறோம். விவாதிக்கிறோம். இங்குள்ள நெருக்கடிகள், பிரச்சனைகள் எங்களைப்போல் மற்றத் தமிழ்ப்பெண்களையும் சிந்திக்க வைக்கிறது. இந்தச் சந்திப்புகளினூடாக எம்மைப்போன்ற பெண்களைக் கண்டு கொள்ளவேண்டும். இப்போது தமிழ் வானொலிகளில்கூட பெண்கள்பிரச்சனைகளைக் கதைக்கிறார்கள். புகலிடத்தில் எழுதும் பெண்களின் ஆக்கங்களை வானொலியில் நிகழ்ச்சியாக்குகிறார்கள். நாங்கள் உடனடியாக மாறிவிடமுடியாது. நீண்டகாலமா அதற்காக உழைக்க வேண்டும். சமரசம் இல்லாமலும், தெளிவான சிந்தனைகளுடனும் தொடர்ந்தும் தொடர்ந்தும் போராடவேண்டும்.

இன்று எமக்கு நம்பிக்கைதரக்கூடியவர்கள், எம்மைப் புரிந்து கொள்ளக்கூடியவர்கள் இங்கு வாழும் இளம் தமிழ்ப்பெண்கள்தாம். அவர்களை நெருங்குவதும் சிந்திக்கத் தூண்டுவதும் எமது பிரதான இலக்காக வேண்டும். இங்கு எமக்கு தொலைபேசி, வானொலி, கொம்பியூட்டர், புத்தகம் என்று எத்தனையோ வசதிகள், வளங்கள் இருக்கின்றன. அவற்றினைப் பயன்படுத்த வேண்டும். நாங்கள் சந்தித்துக் கருத்துப் பரிமாற்றம்செய்து, பின் இணைந்து போராட வேண்டும். எங்களுக்குள் ஒரு றோசா லக்சம்பேர்க், ஒரு சிமோன்தீபூவா, ஒரு அன்பிராங் நிட்சயம் இருக்கிறார்கள். நாம் நிச்சயம் வெற்றி பெறுவோம்.

## சர்வதேச பெண்கள்....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

உற்பத்திகளை அழிந்து போகவிடாது காப்பாற்றி வருகின்றனர். ஆழ்கடல் மீன்பிடி பெண்களுக்கு மறுக்கப்பட்டதாயிருப்பினும் கரையையண்டிய அனைத்து கடல்சார் வருவாய்நடவடிக்கைகளிலும்பெண்களது உழைப்பு பொதிந்துள்ளது. களப்புகளில் இறால், மட்டி, நண்டு, அட்டை பிடித்தல், கருவாடு பதனிடுதல், வலை பின்னுதல் சாயமிடுதல்போன்ற அனைத்து வகை உழைப்பிலும்பெண்கள்ஈடுபடுகின்றனர். மீன்பொருள் சில்லறை வியாபாரிகளாகவும் பெண்கள் அதிகளவில் உள்ளனர். இவ்வாறு தேசத்தின் அனைத்து உற்பத்தி நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதன் மூலம் தேசத்தை வாழ வைக்கும் பெண்கள் தேசத்தை எதிரிகளிடமிருந்து மீட்கும் விடுதலைப் போராட்டத்திலும் வீரமுடன் போரிட்டு வருகின்றனர் என்பது ஈழப் பெண்களான நாம் பெருமை கொள்ள வேண்டிய தொன்றாகும். உலகத்திலேயே முதல்தரமான, துணிகரமான பெண்கெரில்லாக்கள், பெண் தற்கொலைப் போராளிகள் எம்மத்தியில் உதயமாகின்றனர். ஈழத்தமிழ்ப் பெண்களின் போர்க்குணாம்சமும், வீரமும், துணிவும் இன்று உலக பெண்களுக்கு ஆதர்ஷனமாயுள்ளது என்றால்மிகையில்லை.

இத்தகைய பெருமைமிகு வரலாற்றிற்கு உரித்துடையவர்களானஈழத்தமிழ்பெண்களான நாம்இந்த 21ம் நூற்றாண்டின் முதலாவது பெண்கள்தினத்தில்நமக்கென சொல்லத்தக்க வரலாற்றை படைத்துச் சென்ற நமது தாய்மாரையும் சகோதரிகளையும் பெருமையுடன்நினைவு கூர்வோம். உழைப்பாளிகளாக, குழந்தைகளை உருவாக்குபவர்களாக, அறிவுத்துறையினராக, விடுதலைப்போராளிகளாக... இன்னும் பல வழிகளிலும் பெண்களின் ஆளுமைக்கு ஆதர்ஷ புதல்விகளாக வாழ்ந்த, வாழ்கின்ற பெண்களுக்கு நமது தேசத்தின் உயர்ந்த கௌரவம் உரித்தாகட்டும்.

இந்தப் பெருமித உணர்வுடன் 2000ம் ஆண்டில் எமது சர்வதேச பெண்கள் தின உறுதிமொழியை உரத்து முழங்குவோம்:

“தமிழீழப் பெண்களின் விடுதலைக்காக விட்டுக்கொடாதும் சமரசம் செய்யாதும் போராடுவோம்!! எமது போராட்ட பலத்தினால் சர்வதேச பெண்ணுரிமை இயக்கத்தை வலுவூட்டுவோம்!!!”

## மக்கள் களம்...

1. 11வது இதழின் ஆசிரியர் பத்தியில் மாறுதல் தென்படுகிறது. தொடர்ந்தும் இவ்வாறு அரசியல்தாக்கமிக்கதாய் ஆசிரியர் பத்தி அமையுமென எதிர்பார்க்கிறேன்.

   *- சுகிர் - நிலாவெளி.*

2. சிறிலங்கா அரசுத் தலைவர் அதிஉயர் இராணுவ இலக்கு எனும் கட்டுரை மிகவும் வித்தியாசமான கோணத்திலிருந்து ஒரு உண்மையை வெளிப்படுத்தியுள்ளது. இதுநாள்வரையும் அரசுத் தலைவர்களை போராளிகள் அழித்தொழிக்கையில் அதை தனிநபர்பயங்கரவாதம்என்றும்இத்தலைவர் போனால்இன்னொரு தலைவர் வராமலாப் போவார் என்றும் தனிநபர் அழித்தொழிப்பிற்கெதிராக கருத்து நிலவும் சூழ்நிலையில் இக்கட்டுரையானது ஒரு அரசுத்தலைவரின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. எதிரி தரப்பு சாதாரண சிப்பாய்கள் அன்றாடம் கொல்லப்படுவது யுத்தத்தின் சாதாரண நிகழ்வாகியுள்ளது. அதேநேரம் சிப்பாய்கள் மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் அழிக்கப்படுவதன் முக்கியத்துவமும் யுத்த அரசியலில் ஏற்கப்பட்ட தொன்றாயுள்ளது. எனினும் முப்படைத்தளபதியாக இருக்கும் அரசுத்தலைவர் ஆக்கிரமிப்பு யுத்தத்தில் வகிக்கும் பாத்திரம் இதுவரை உணரப்படாதே இருந்து வந்துள்ளது. இக்கட்டுரை அதை சிறப்பாக உணர்த்தியுள்ளது.

   *மதியழகன் - தமிழகம்*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'The Editor'
BM Box 4002
London. WC IN 3XX
United Kingdom

www.thamileelam.org
info@thamileelam.org

# வெல்க, பெண்கள் தம்விடுதலையை!

**வ**ணக்கம்!

பங்குனி.8. உலக பெண்கள் தினம். ஆணாதிக்க முறைமையினாலும் மதம், கலாச்சாரம், இனம், சாதி,அரசியல், பொருளாதாரம், நிறம்.... என பன்முக அடக்குமுறைகளினாலும் தமது சுயத்தை, உரிமைகளை, தமது வாழ்வை இழந்திருக்கின்ற பெண்களின் விடுதலையை ஓங்கி ஒலிக்கின்ற நாள். இந்த நாளில், அடக்கப்பட்டிருக்கின்ற பெண்களின் விடுதலை உணர்ச்சியுடன் , தமிழீழ மக்கள் கட்சி தன்னையும் இணைத்து கொள்கின்றது.

உலகெங்கும், பெண்கள் தங்கள் விடுதலைக்காக, தமது உரிமைகளுக்காக, தமது வாழ்வுக்காக போராடுகின்றார்கள், பெருமைக்குரிய வெற்றிகளை பெற்று வந்திருக்கின்றார்கள். மனிதகுல விடுதலையானது, பெண்களின் விடுதலையுடன் இறுகப் பிணைந்திருக்கின்றது என்ற உண்மையை அவர்கள் தெளிவாக நிரூபித்து வருகின்றார்கள்.

பெண்களின் நீண்ட போராட்ட வரலாற்றில், நமது பெண்களின் போராட்டமானது, துல்லியமான, தீர்க்கமான திருப்பு முனையை குறிக்கின்றது. சிறிலங்கா அரசுக்கு எதிரான ஆயுதப்போராட்டத்திலும் யுத்த அழிவுகளை எதிர்கொண்டு நிமிர்ந்தெழுவதிலும் தமக்குள் திரள்கின்ற பன்முக ஆற்றல்களை, அவற்றின் முழுவீச்சுடன் வெளிப்படுத்துவதிலும் நமது பெண்கள் வரலாற்று முன்னுதாரணமாக திகழ்கின்றார்கள். தம்மீதான அனைத்து அடக்குமுறைகளையும் தளைகளையும் தகர்த்தெறிந்து, சுதந்திர ஜீவிகளாக உயர்ந்தெழுவதற்காக நமது பெண்கள் முன்னெடுக்கின்ற அனைத்து போராட்டங்களிலும் தமிழீழ மக்கள் கட்சி எப்போதும் அவர்களுடன் இணைந்து நிற்கும் என்பதை தெளிவாக பிரகடனம் செய்கின்றது.

நமது தேசிய பிரச்சினைக்கு, அரசியல் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கான முயற்சிகள் மேலும் தொடர்கின்றன. இவ்வாறான அரசியல் பேச்சுவார்த்தை இடம்பெறுமாயின், அதை எமது உரிமைகளை வென்று கொள்வதற்கான ஒரு களமாக பயன்படுத்துவதில் நாம் உறுதியாகவும் தெளிவாகவும் இருக்க வேண்டும். அரசியல் பேச்சுவார்த்தை என்பதும் ஒரு போராட்ட வடிவமே என்பதை புரிந்து கொண்டு, அதனூடாக நமது தேசத்தின் உரிமைகளை வென்று கொள்வதற்கான வழிமுறைகளை உருவாக்க வேண்டும்.

இத்தகைய அரசியல் பேச்சுவார்த்தையானது, பல கட்டங்களை கடந்து செல்கின்ற ஒரு படிமுறை நிகழ்வுப் போக்காக இருப்பதால் அதன் ஒவ்வொரு கட்டத்திலும், நாம் முன்வைக்க வேண்டிய கோரிக்கைகளை தெளிவாக வரையறுக்க வேண்டும். அவற்றை வென்றெடுப்பதற்கான உத்திகளை, அரசியல் அணுகுமுறைகளை வகுக்க வேண்டும். நமது மக்களை ஓரணியில் திரட்டுவதன் மூலமும் நமது கோரிக்கைகளை தேசநலன் சார்ந்து உருவாக்குவதன் மூலமும் அரசியல் பேச்சுவார்த்தை என்ற போராட்ட களத்தில் நமது நிலையை வலுவாக பேண முடியும்.

சிறிலங்கா அரசு, அரசியல் பேச்சுவார்த்தை என்ற கோஷத்தை எப்போதும்போல் ஆரவாரமாக பிரச்சாரப்படுத்துகின்ற போதிலும் அதன் படைகள், நமது மண்ணில் தொடர்ந்தும் தமது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டவாறே உள்ளன. சல்லிகிராமத்தின் மீது, சிறிலங்கா கடற்படையினர் நடத்தியுள்ள வெறியாட்டமும் தான் ஆக்கிமித்துள்ள திருக்கேதீஸ்வர ஆலயத்திலிருந்து இராணுவம் வெளியேற மறுப்பதும் அண்மைய உதாரணங்களாக இருக்கின்றன. எனினும், இவற்றை எதிர்த்து நமது மக்களும் மதநிறுவனங்களும் முன்னெடுத்திருக்கின்ற உறுதியான போராட்டங்கள், சிறிலங்கா அரசையும் அதன் படைகளையும் நிலைதளரச் செய்திருக்கின்றன.

ஆம்! நமது மக்கள் சுயமாக முன்னெடுக்கின்ற வெகுஜன போராட்டங்களின் வலிமையும் ஆற்றலும் இப்போது தெளிவாக நிரூபணமாகி வருகின்றன. நமது விடுதலை போராட்டத்தில், வெகுஜன போராட்ட வடிவம் படிப்படியாகவும் உறுதியாகவும் நிலைபெற்று வருவதானது, நமது போராட்டத்தின் மக்கள் சாரத்தை மேலும் ஆழமாக்குகின்றது. நமது விடுதலையை மேலும் உறுதியாக்கியுள்ளது. நாம் மீண்டும் உரத்து சொல்கிறோம்: மக்களுக்கே அனைத்து அதிகாரங்களும்!

ஆசிரியர் குழு.

**15..3. 2000**

வட அமெரிக்கத் தொடர்புகட்கு:
300 Borough Dr.,
PO Box 47032
Scarborough,On.
M1P 4ZP
Canada

ஐரோப்பியத் தொடர்புகட்கு:
'The Editor'
BM BOX 6769
LONDON
WCI 3XX, U.K.
Tel: 00 44 7041 37 20 64

# இந்த புத்தாயிரத்தின் முதலாவது சர்வதேச பெண்கள் தினத்தை அனைவரும் நினைவுகூருவோம்

## நம் தேசம்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இடையிலான ஆத்மார்த்த உறவு குறித்தெல்லாம் என்ன புரியும்? நாட்டின் அரிதான வளங்களை அந்நியர்களுக்கு விற்றுத்தள்ளி விட்டு, அங்கிருந்து அப்பிள் இறக்குமதி செய்பவர்கள் இந்த ஆளும்குழுமம். மனித மிருகங்களான இவர்களை தொலைப்பதும் அவர்களின் ஏவலாட்களை விரட்டியடிப்பதும் எமது தேசவிடுதலைக்கு மட்டுமல்ல எமது உயிர்களையும் எம்மைச்சுற்றியுள்ள உயிரினங்களையும் காக்க ஒரே முன்னிபந்தனையாகும்.

ஏற்கனவே பட்டிப்பளையின் பசுமையான பல்லாயிரம் ஏக்கர் காணிகளை ஆக்கிரமித்துள்ளனர். எஞ்சியிருக்கும் பகுதியிலும் இந்த அடாவடித்தனங்களை மேற்கொள்கின்றனர். மனிதரை கடித்து அடங்கா வெறி இப்போது, மந்தைக்கூட்டங்களை அழித்தொழிக்க முனைகின்றது. அமெரிக்க கண்டத்தின் பூர்வீக குடிகளை பூண்டோடு அழிக்க நினைத்து அது முடியாது போகவே அவர்களின் கால்நடைகளை இலட்சக்கணக்கில் கொன்று குவித்தார்கள் அன்றைய வெள்ளை ஆக்கிரமிப்பாளர்கள். இன்று நம்கண்முன்னே இந்த சிங்கள் ஆக்கிரமிப்பாளர்கள் . . .வரலாற்றின் எச்ச சொச்சங்கள். . . ஆக்கிரமிப்பாளர்களின் பண்புகள் நூற்றாண்டுகளானாலும், பல்லாயிரம் மைல்கள் இடைவெளியானாலும் ஒன்றேதான்.

## புறக்கோட்டை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பறிமுதல் செய்த அரசு, அவற்றை தம்மவர்களுக்கு உரித்தாக்கியது. இன்று பல புதிய சிங்கள வர்த்தகசிங்கங்கள் புறக்கோட்டையை வலம் வருகின்றன. சிங்கள அரசியல்வாதிகளை இவர்கள் நன்றிக்கடனுக்கு பலப்படுத்துகின்றனர்.

மிச்சசொச்சங்களை வேட்டையாட இன்று சிங்கள வீரவிதான, பாதாளகும்பலின் பின்னணியில் இந்த அரசு செயற்பட்டு வருகின்றது. நாட்டுப்பற்று, சிங்களதேசியம், சிங்களவர்களை பாதுகாத்தல், அந்நியர் ஒழிக என்ற கோசங்களின் கொப்பளிப்புகளுக்கு பின்னால் இந்திய, பாகிஸ்தானிய பொருட்கள் பகிஸ்கரிப்பு கோசங்களும் இடுகின்றனர். இவர்களுக்கெல்லாம் அமெரிக்க, ஐரோப்பிய, ஜப்பானிய பெருங்கொள்ளைக்காரர்களும், காசினோ சூதாட்டக்காரர்களும், கடற்கரை பாலியல் தொழில்களும், வளமான கடற்படுக்கைகள் கனிப்பொருட்கள் விலைபோவதும் விமானப்போக்குவரத்து விற்கப்படுவதும் ஒரு பொருட்டல்ல.

மாறாக, சிங்கள மக்களின் பசிக்கும், வறுமைக்கும், வேலையில்லாமைக்கும் இந்த தமிழர்களும் முஸ்லீம்களும்தான் காரணம். அன்று பிரிட்டிஷ் கொலனியாதிக்கத்துடன் கைகோர்த்த இந்த ஆளும்குழுமம் தனது இந்த மோசடியை மறைக்க, தமிழ், முஸ்லீம் மக்களை திட்டமிட்டு இலக்குகளாக்கியது. அரசியல்பலத்தையும் பயன்படுத்திக்கொண்டது. இன்று நவீன ஏகாதிபத்திய பொருளாதாரத்திற்கு நாட்டை விற்றுத்தள்ளிவிட்ட அவர்களின் வாரிசுகள் அதே தமிழ், முஸ்லீம் மக்களை சிங்கள மக்களுக்கு விரோதிகளாக்குகின்றது. இதனை அப்படியே ஏற்றுக்கொள்ளும் சிங்கள மக்களும் தம்மைதாமே அடிமைகளாக்கி கொண்டு விட்டனர். ஆளுங்குழுமத்திற்காக தம்மை தாமே அழித்தும் கொள்கின்றனர். தமக்குள்ளும் அடிபட்டுக்கொள்கின்றனர். சிங்கள மக்களை ஆதிக்கம்செய்யும் இந்த சிங்கள இனவாத சித்தாந்தத்தையும் அதன் காவலர்களையும் அவ்வளவு இலகுவாக நாம் எடைபோட்டுவிடக்கூடாது என்பது மட்டும் உறுதி. இன்னமும் விழிப்புடன் இருப்போமா?

## தென் தமிழீழ...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பல்வேறு பிரிவினர்களும் தமக்கிடையிலான வேறுபாடுகளை ஒருபுறம் வைத்துவிட்டு, ஒன்றுபடுவது எமது தேசத்தின் நியமான அரசியல்கோரிக்கைகளுக்கு தற்போது வலுச்சேர்ப்பதாக உள்ளது. இந்த வகை செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுப்பதன் மூலமே எமது பக்க நியாயம் சர்வதேசசமூகத்தின் கவனத்தை ஈர்க்கும். தமிழ் கட்சிகள் உட்பட அனைத்து மக்கள் பிரிவினரும் இதில் கலந்து கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். பாஸ்முறைக்கு எதிராகவும் இப்பேரணி கோரிக்கை வைத்துள்ளது.

சிறிலங்கா அரசினதும் இனவெறிச்சக்திகளினதும் அக்கிரமங்களுக்கு எதிராக மக்கள் பல்வேறு வடிவங்களில் தாமாகவே போராட்டங்களை ஒழுங்கமைத்து மேற்கொள்கின்றனர். இது நமது தேசிய விடுதலைப் பேராட்டத்தில் இடம்பெற்று வருகின்ற ஒரு புதிய பரிணாம வளர்ச்சியாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்